உ

திருச்சிற்றம்பலம்.

யாழ்ப்பாணத்துச்

சுன்னாகத்திலெழுந்தருளிய

காசி: அ. வரதராஜபண்டிதர்

இயற்றிய

சிவராத்திரிபுராணம்.

இது

வல்வை

இயற்றமிழ்ப்போதகாசிரியர்

ச. வயித்தியலிங்கபிள்ளையால்

கரலிகிதவழுக்களைந்து

தஞ்சாவூர்-சதாவதானம்

சுப்பிரமணிய ஐயரது

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்

விசுவசு ஆவணிமீ

சிறப்புப்பாயிரம்.

---:o:---

யாழ்ப்பாணம்
பயில்வாகனப்புலவரியற்றியது.

பூதராசனுய ரசலராசன்மகள் பங்கனன்புதரு பண்புசேர்
விதராசசிவ நிசியினீள்சரிதை மிகவிளக்கிட விளம்பினுன்
காதராசனைய மொழியரங்கனருள் கருணைமாரிகெர் பருணிதன்
வாதராசன்மறை ஞானராசன்மிகு மதுரவாசகவி ராசனே.

யாழ்ப்பாணம்
சின்னத்தம்பிப்புலவரியற்றியது.

மைத்தவிடப் பணிப்பணியான் வாசனமுஞ் சராசனமு மலை யாக் கொண்ட, சித்தனுயர் சிவபிரான் மியமதனைச் செந்தமிழாற் றெரித்தல் செய்தா, னத்தகைய பாரத்து வாசகோத் தினரங்க னருளு மைந்தன், சத்தபுரி கலிற்காசி நகர்வரத பண்டிதன்முத் தமிழ்வல் லோனே.

யாழ்ப்பாணம்
சி. வை. தாமோதரம்பிள்ளையியற்றியது.

சீரியலிங்க சொரூபனருள் சொலிசிவராத் திரிபுரா ணஞ்சுகன் ஞகத்
தியலிங்க* மயவரத ராஜபண் டிதமறையோ னியம்பி னுன்வைத்
தியலிங்கன் வல்வையியற் றமிழ்ப்போத காசிரியன் செகமீ தச்சிவ
மயலிங்கங் கிலாதவகை வழங்கவச்சுக் களிற்றினிது வகுத்தா னன்றே

* இலிங்கம்-அறிவு.

திருச்சிற்றம்பலம்.

சிவராத்திரிபுராணம்.

காப்பு.

ஒந்துமொரு மருப்பினை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரகவேந்தன், றங்குமெழு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயிலமானைப், பாங்குறவைத்து மழுத்தானை பரித்தான்றன் றனித்தானைப் பசும்பொற் றோட்டுப், பூங்கமலப் பதத்தானைப் பொருவிலைக்கு கரத்தானைப் போற்றல் செய்வாம்.

கடவுள்வாழ்த்து.

சபாபதி.

சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந் திருமாலும் தேவர் கோவுஞ்
சேர்தந்த நெடிப்புலிக்காற் றவமுனியும் பதஞ்சலியுங் குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை விழிகளிப்ப மன்று ளாடுங்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிரு வடியிணைகள் கருத்துள் வைப்பாம்.

சிவகாமியம்மை.

கடிகமழ்நட் கமலமலர்க் கட்டிகிரிக் கதிருருகு காம தாகிப்
படியிடந்து மறிவரிய பதப்பவள மலைமருங்கிற் படரும் பச்சைக்
கொடிகொடிய பவக்கடலிற் குளித்தழுந்தா தின்பமுத்தி கூடும்வண்ண
மடியவருக் கருள்புரியுஞ் சிவகாமி யம்மைபதந் தன்பு கூர்வாம். (௨)

விநாயகர்.

சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு தில்லைமன்றிற் றுலங்கு கோயிற், பொற்பகலாக் குடபுலக்கோ புரத்தமரர் கணத்தலைவர் போற்ற மேவி, யற்பகனுண் மலரிறைத்துத் தொழுமடியார் கேட்டவர மளித்த லாலே, கற்பகமா மம்பெருமே ரம்பூனையோர் சொம்பலையுட் கருதி வாழ்வாம். (௩)

சுப்பிரமணியர்.

சூராட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்தின் டகுவியர்கழு தேர்பும் வாட்கண்ண, ணீராட்டுப் பெறமறீ டவுணருடற் புலவலகை நிறையத் தேக்கிப், பாராட்டுத் தரவடிவேற் படைபணித்த சரவணன் பார்ப் பதிக்குச் செல்வச், சீராட்டுப் பிள்ளையெனு முருகன்முரு கவிழ்மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம். (௪)

இரங்குன்றன் றஞ்சகமக் கென்றுமக வான்முதலோ ரிரப்ப நீண்டு, காங்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோ னரிமுகத்தோன் கதங்கொள் சூரன், வரங்குன்ற மயிலுகைத்தங் கயிலெடுத்த மலர்க்கரத்தோன் மஞ்சு துஞ்சும், பரங்குன்றத் திருந்தசெவ்வே ளடிக்கடிச்செம் பதுமமலர் பணிதல் செய்வாம். (௫)

ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்குங் களத்தமர்ந்தே தெய்தி யொரு ர்தில், வாரலைவா யுறமொருமா வனாயோரொான் றோரிரண்டா வகிர்ந்த வேலோன், வேரலைவா யுதிக்கமென்றேட் சவ்ப்படைத்த வள்ளிசுர வேழத் தோடுஞ், சீரலைவாய் வருபடிக ளடியரடிப் பொடிமுடியிற் சேர்த்தல் செய்வாம். (௬)

பெருவாவிக் கயனயனைக் குறத்திமுகாம் புமலர்த்தும் பெட்பினென்று, மொருவாவி னன்குடிலைப் பொருள்விரித்துத் தாதைதனக் குரைத்தோ னூர்கா, மருவாவி கன்குடிளைப் புனல்மலர்த்தே தறடனைவி வயற்குப் பாயுந், திருவாவி னன்குடிவாழ் செவ்வேடன் சேவடிகள் சிந்தை செய்வாம். (௭)

பாரகத்தும் விண்பகத்தும் பயின்முனிவ ரிமையவர்தம் பழங்கணீங்கத், தாரகத்தோன் மறையுருவாய் மருவுசிவ சத்திதரு சத்தியால் வெஞ், சூரகத்தைத் துளைபடுத்தி யொருதோகை யேறியிரு தோகைமாரோ, டேரகத்தி லிருந்தபிரா னென்னைசத்தி லிருக்கவிடாக் கிடமின் றென்பால். (௮)

நீடலுறழ் கருங்கணங்கள் படிந்துமுழ வெனமுழங்க விரிந்து தும்பி பாடல்புரி தாத்தழைத்த பாசடைச்சந் தனப்பணையிற் படருஞ் செய்ய கோடலலர் விளக்கேந்தக் குலமயிலா டகப்புரியுங் குன்று தோறு மாடல்புரி முருகனிரு சரணமலர் பரவிவினை யகற்றி வாழ்வாம். (௯)

உருத்தணியாய் வருமசுர ருடறுணிக்கு கெட்டிலைவே லுரவோர் துன்பக், கருத்தணியாப் பெருவெயிலுட் டிழைத்திளைத்த களையகல

க்கருணைக கண்டம், திருத்தணியார் கழனிழற்கீ ழென்றுவழி படுமடி யாரிதயத் துள்ளும், திருத்தணியாம் பதியகத்தும் வாழ்குமர குருபரன் றன் சிரமேற் கொள்வாம். (௧௦)

பொருவினறு மலர்பொதுளுந் தண்டலைசூழ் கதிரைநகர்ப் புனிதன் பாத, முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து மாறெழுத்து முணர்ந்து நாவின், முருகசர வணபவசண் முகவென் றனுதினமு மொழிவோர் தங்கள், மருமருவு கமலமல ரடிமுடியின் மீதுவைத்து வணங்கல் செய்வாம். (௧௧)

திருநந்திதேவர்.

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற் றனிவிழியுந் திண்டோணான் குங், கையதனிற் சூலிகைமழுப் பிரம்புகளை யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி, வையமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை மலைகாக்க மதியஞ் சூடி, மையலறுள் பெற்றநந்தி யடிக்கமல முடிக்கமல மாக வைப்பாம்.

சரஸ்வதி.

காரதிருங் கயிலைமலைக் கண்ணுதன்முப் புரமெரிக்கக் கருது மந்நாள், வேதிகந் தருந்தரங்கத் தடங்கடல்சூழ் திடம்புடவி நெடுந்தேரூர்ந்த, சாரதிநின் றிருநாவி லடியருளத் தினிலிருக்குந் தவளமேனிப், பாரதிசெம் பதப்பதுமத் துணைப்போது முப்போதும் பரவல்செய்வாம்.

சண்டேசுரர்.

ஈளிரண்டு கரத்தெடுத்த நிறைகுடப்பான் முதற்புனித நீரி லாட்டி வாளிரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேள் வனைவழுத்தி மலர்கள் சாத்தி யாளிரண்டு பதமளித்தென் றருச்சிக்கு மமையுமதி லவஞ்செய் தந்தை தாளிரண்டு மறவெறிந்த சண்டேசர் முண்டகப்பொற் றாளிற் றாழ்வாம்

திருஞானசம்பந்தநாயனார்

வெங்குருவிற் கவுணியர்தங் குலத்துதித்து மீனவன்றன் வெப்புங் கூறு,மெங்குமிசை பெறமாற்றி யமணரெண்ணா யிரர்கழுவி னேற வேற்றிப், பங்கமிலென் பரிவையுருப் படைத்துயிர்பெற் றெழப்பதிகம் பாடி மேன்மை, தங்குமறைத் திருஞான சம்பந்தன் றாட்டுணைக டலைமேற் கொள்வாம். (௧௫)

சுந்தரமூர்த்திநாயனார்.

மங்குனிறத் திருநெடுமால் வளையெயிற்றுப் பெருங்கேழல் வடிவந் தாங்கி,யங்கணில முழுதுமுழு தறிவரிய கமலமல ரடிகள் சேப்பச்

சங்கநிதிகைக் குதலைமொழிச் சாவைவிழிப் பரவையென்பா டன்பா லன்பாற், பொங்கிருளிற் சந்தானை நடப்பித்த சுந்தரனைப் போற்றல் செய்வாம். (கசு)

திருநாவுக்கரசுநாயனார்.

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காய்ச் சென்றமர்செய் காம ஞைமம், பூவரசு படவிழித்துப் புலிவேங்கை யத்தியதழ் புனைந்து போர்த்த, தேவரசு மனமகிழத் திருப்பதிக மிசைத்தமிழிற் சிறக்கப் பாடு, நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன் னாட்டரசு நல்கு மன்றே. (கஎ)

மாணிக்கவாசகசுவாமிகள்.

பெருவாத பித்தகபப் பிணிக்குடைய முடற்சுமக்கும் பிறந்தை நீக்கி
யொருவாத சிவகதியி னுரிமைபெற வுறவமல ருமிழுஞ் சோலை
மருவாத மனோந்துலவு மன்றுடையாற் குக்கோவை பாலை சாத்தும்
திருவாத வூரடிக ளடிகள்படி யுறவணங்கிச் சென்னி சேர்ப்பாம். (கஅ)

தில்லைமூவாயிரர்.

செம்மையா ரழலொருகை துடியொருகை தரித்துமன் றிற் றிருக்கூத் தாடு, மெம்மையா ளுடையபிரான் யாமவரி லொருவனென் றன் றிசைக்கப் பெற்ற, மும்மையா யிரமுனிவர் பொற்பொதுவிற் றிருப்பணிதண் முயன்று செய்வோர், தம்மையா யிரமுறைகை தொழுதலையோர் தாட்டுணைக டலைமேற் கொள்வாம். (க௯)

சிவனடியார்.

பொய்விரவு பவக்கூற படப்புரிவெண் டிருநீறு பூசிக் கண்டி, கைவிரவு மணியினரா யஞ்செழுத்து முணர்ந்துமனக் களங்க நீங்கி, மெய்விரவு மறைவரம்பி னிலைகடவா தொழுகியருண் மேன்மை பூண்ட, மைவிரவு கண்டர்தொண்டர் மலரடிகள் சிரத்திருத்தி வழுத்தல் செய்வாம். (உ0)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

பாயிரம்.

கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத் தறிஞர்திருக் கடைக்க ணோக்கி, முந்தவுணைத் தனர்பலரு மாயினுநீ யாகமநூன் மொழிவழாமற், பந்தமறுத் திடுஞ்சிவராத் திரிவிரத சரிதைதனைப் பாடி யென்

ணக், செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனாற் றிரட்டியொன்றாச் செப்ப லுற்றேன். (௧)

வீணிலிவன் றனதுமடம் வெளிப்படையாச் செய்தனனால் வித்தின் பாரதி, நாணிலனென் றெனையுலகி னுவலர்க ளுருவரதை நாடிச் சற்றும், பேணிலினின் மலனிரவின் பெருமையெடுத் துரைக்குமிந்தப் பேறு கூறு, மேனிலனெண் சிவபதத்து விருத்தமெனும் விருப்புராத்தை யீர்த்த லாலே. (௨)

வேறு.

அரியநற் பரத விதிமுறை வழுவா தாடுகூ ராடல்கண் டுவப்போர், விரிசிலைத் தருவின் வாழ்கவிகடமுங் கண்டுள விருப்பொடு வியப்பார், தெரிதமிழ்ப் புலவ ரமிழ்தெனத் தெருட்டுஞ் செய்யுள்கேட் டகமகிழ்ந் திருந்தோர, குரியபொன் புன்சொற் கவிசெவி யேற்றுள் ளுவப்புறச் செப்பநா னுரைத்தேன். (௩)

பாயிரம் முற்றிற்று.

சிவராத்திரியுற்பவச்சருக்கம்.

திலக வாணுதற் கலைமகள் செறிதலாற் றினமு
மிலகு நான்மறைத் தொனிகனி யிசைத்திடு தலினு
லலகிலா வுயிர் படைக்குநான் முகத்தினை யாமென்
றுலகு போற்றுநை மிசவன வாற்றிறி துரைப்பாம். (௧)

மண்ட லத்துளோர் செங்கனிப் பவளவாய் மடுத்தன்
றுண்ட முண்டகக் கட்புரு டோத்தம னுறையுங்
குண்ட மொண்டழற் கண்ணினான் குவவுல கொப்பென்
றண்டர் யாவரும் புகழ்வது நைமிசா ரணியம். (௨)

முனிவர் முன்னொருநாண் முண்டகத் தவிசினன் முகனைப்
புனித மாதவம் புரிந்தியாம் வைகிடப் புவியி
லினிய நற்றல மியம்புதி யென்னவெண் கமல
வனிதை கேள்வனோர் நூண்ணுதித் தருப்பையை வாங்கி. (௩)

இருகை யால்வளைத் துருட்டி யீதிறுத்திடு மிடத்திற்
பொருவின் மாதவம் புரிதிரென் றுரைத்திடப் போனார்
கிருது மக்குசை தங்கிய காணமற் றதனாற்
றிருவு றைந்திடு நைமிச வனமெனச் சிறந்த. (௪)

துன்று கொன்றையாற் பசுங்கொடி விரவலாற் சுடுதீ
யென்று மேவலாற் கவிடப் பணிகளெய் துதலாற்
கன்று மானுகண் டுறைதலாற் கதிர்மணிக் கனக
மன்று ளாடிய பரம்பர னிகர்க்குமவ் வனமே. (௫)

ஆண்டெ டுழந்துயர் சோலைக ளறவருக் கடைகாய்
மாண்ட நற்கனி மலர்முதல் வழங்கினஞ் சுரர்க்கு
மீண்ட ளித்திட வேண்டுமென் றெண்ணிவா னளவாய்
நீண்ட வன்றடஞ் சினைக்கையை நீட்டியே நிற்கும். (௬)

சடையர் குண்டிகை தரித்திடுங் கரத்தர்கண் டிகையின்
றொடைய ராதப மறைத்திடுந் தோகைமென் பீலிக்
குடையர் செய்யகற் றோய்த்திடுங் கோடிக மிறைஞ்சி
யுடையர் மாதவத் துறுவர்க ளுறுவதவ் வனமே. (௭)

ஆத பந்தெறு வேனிலு ளம்புதந் துளித்துச்
சீத நீர்பொழி மாரிநா ளிமம்பெயுந் தினங்கண்
மாத வந்தவ ருதிழைத் துய்ப்பரு மதிக்கப்
பாத கங்களைக் கடிந்திடும் படிவரப் படிவர். (௮)

உருப்ப வெந்தழல் வேட்பவ ரொண்மலர் சமிதை
தருப்பை தண்டளி ரெடுப்பவர் தயனியச் சிகரப்
பருப்ப தந்தனைத் தனுவெனக் குனிசெய்த பரனை
விருப்ப மோடருச் சிப்பவ ரெண்ணிலார் விபினில். (௯)

இன்ன நைமிச வனத்தியல் பனைத்தையு மெடுத்து
வன்ன மாமணி கிடந்தொளிர் பஃறலை வாயாற்
சொன்ன வூழிகள் பற்பல தொலைந்திடத் துணிந்து
பன்ன காதிபன் பகரினும் பகர்ந்திடற் கரிதால். (௧௦)

தெருண்ம னத்துயர் வியாதன்மா ணாக்கரிற் சிறந்த
மருண்ம னத்தினர்க் களவிடற் கரியநான் மறையின்
பொருண்ம னத்துணர் சூதன்முற் புராணநூல் வல்லோ
னருண்ம னத்துட னனையநை மிசவனத் தடைந்தான். (௧௧)

வேறு.

வந்தமா முனிவன் றனக்கெதிர் புகுந்து வருகென வுரைத்திவண் வரநீ
யெந்தமா தவஞ்செய் தனமென முகம னியம்பியங் கியாவரு மிறைஞ்சி

யந்தமா மணிப்பொற் றவிசினி லிருத்தி யருத்தியோ டடுக்கிய முதலா
மைந்தவா தரவிற் பூசனை விதியின் முறைதவ றுவகை முடித்து. (கஉ)

மழைக்கரு முகின்மின் னிறத்தசெஞ் சடில மாதவர் சூதனை நோ
க்கி,யிழைப்பதற் கெளிதாய்ப் பவக்கடல் சுவற்றி யிருங்கதிப் பேறுநல்
குவதாய்க், குழைக்கய னடந்து கழிக்கயன் மருட்டுங் கூர்விழிக் கோ
தைபங் கிருக்கு, முழைக்கரப் பெருமா னவ் விரதமொன் றெமக்கின்
றுரைத்திட வேண்டுமென் றிரப்ப. (கங)

நன்றென முகமு மிதையமு மலர்ந்து நயனநீர் பொழிதர விருந்து
முன்றவ மிழைத்த பயனிது கேட்க முயன்றது நீவிர்முக் குறும்பை
வென்றழா தவத்தீர் விடையுயர்த் தருளும் விமலனுக் குரியநல் விரத
மொன்றுள தமர ரனைவரு நோற்ப துரைக்குவ னுவந்துகேட் டிடுமின்.

மின்னனோர் சடிலத் தவிர்மதிக் கொழுந்து மிலைச்சிய சிவனிராப்
பெருமை,யன்னவூர் தியுமோ ராயிரங் கவைநா வனந்தனு மறைந்திட
ற் கரிதாலு மன்னுமா தவஞ்சேர் நந்திவா னவற்கு வழுவையு முழுவை
யு முரித்தோன், முன்னனோ ருரைத்த தென்னெரு நாயான் மொழிந்
திட முடியுமோ முடியா. (கரு)

உலகுயிர் பிரமன் படைப்பதும் திருமா லுயிர்த்தொகை காப்பது
முலகி, லலகிலா வளம்பெற் றியக்கர்கோ னளகை யளிப்பதுங் களிப்
பொடிங் கிரன்று, னிலகுபொன் னுலகம் புரப்பது மதிய மிரவிசெந்
தழற்கிறை யிவர்க, டலைமைபெற் றதுவுஞ் சிவநிசி விரதந் தனையிழைத்
தெனவுளத் துணர்வீர். (கசு)

கூறுகான் மறையோர்க் கிருநிலம் பசும்பொற் குவைபசுக் கோடி
நல் கிடினும்,வேறுவே றுரைத்த விரதநோற் றிடினும் விரியுளைப் புர
வியின் வேள்வி, நூறுசெய் திடினும் புனலிவண் டரள நுரைத்திரை
கொழித்திடுங் கங்கை, யாறுமூழ் கிடினுஞ் சிவநிசி நோற்போர் பெ
றுபய னடைதன்மற் றரிதால். (கஎ)

அந்தண ரரசர் வணிகர்வே ளாள ராதியா யிழிகுலத் துதித்த
வெந்தொழி லாள ரந்தமா யிந்த விரதமே நோற்றிடி லவர்தா
மிந்திர னயன்மா லிமையவர் முனிவர் யாவரு மிறைஞ்சிநின் றேத்தக்
கந்தடு களிறன் றுரித்துமெய் தரித்த கண்ணுதற்கடவுளிற் பொலிவார்.

ஆவினைப் புரிநூ லணிதரு மருமத் தருமறைக் கிழவரைக் கருங்க
ண், மாவினை யளித்த கடலமிர் தனைய மழலைமென் மொழிச்சிறு மகா

ரைக், காவிலைப் பொருவுங் கருங்குழற் செவ்வாயக் கனையர்வர்க
ளைச் செகுத்த, தீவினை யனைத்தும் பரிதிமுன் னிருள்போற் சிவநிசி
நோற்றிடிற் றீரும். (உ௰)

மறைகளிற் சாம மகங்களிற் புரவி மகமலை களின்மக மேரு
நிறைபுன னதியிற் கங்கையோ ரைந்தாய் நிகழ்ந்தபூ தத்தினு காயம்
முறைதெரி சுரரிற் கருமுகிலூர்தி முதன்மைபெற் றுயர்ந்ததா மென்ன
மறைதரு விரத மனைத்தினு முனாக்கு மானிர வதிகமென் றறிமின்.

மற்றொரு விரதஞ் சிவநிசிக் கிணையா மதிப்பது மாண்டமீண் டுதி
த்துப், பெற்றன தொழில்க ளியற்றிநின் றழலும் பிரமன்மான் முதலி
மையவரைப், பற்றலர் புரமோர் நொடியினி லடலை படவட்ட வனாரு
ணித் தருளுங், கற்றையஞ் சடிலக் கண்ணுதற் கிணையென் றறிவிலா
ருரைப்பது சமைக்கும். (உக)

அன்புளா ரன்றி யன்பிலா ரெனினு மரனிர வினினுண வகற்றிப்,
புன்புலா னுடலம் வருந்திடத் துயில்கண் பொருந்திடா தருச்சனை புரிந்
தார், றுன்பசேர் பிறவிச் சுழிக்கட லழுந்தித் துயருறார் துறக்கமே முத
லா, மின்பமார் பதத்திற் போகமார்ந் தமல னிணைப்பதம் பெறுவரென்
றிசைத்தான். (உஉ)

இனையன மொழிகள் கனைகட லமிர்த மெனச்செவிப் புலம்புக மு
னிவ, ரனைவரு மகிழ்ந்து மெய்ம்மயிர் பொடிப்ப வங்கையாற் றொழுது
பைங் குவளைச், சுனையயில் கயிலைச் சிவநிசி விரதத் தோற்றமு நோற்றிடு
மியல்பும், வினையக றவந்துச் சூதமா முனிவ விரித்துரைத் தருளென
விளம்பும். (உங)

பெற்றுயர் கற்பவீற் றுலகீன்ற பிதாமக னுலந்தபே ருலக, முற்று
மற் றொழிந்திடப் பிரளயத் துயிர்கண் முடிந்திடுங் கங்குலி னொருத்தன்,
புற்றுமா மறையா கமவிதிப் படிவண் டுழுதகே னுண்டபொட் டயரும்,
பொற்றுணர்க் கடுக்கைத் தொடையிடை சடிலப் புனிதனை யருச்சனை
புரிந்தான். (உச)

யாமமோர் நான்குஞ் சென்றகன் றுகாந்தத் திருட்பொழு தகன்று
பி னிதழித், தாமமார் புனைந்த சோமசே கரன்பொற் றாளிணை பணிந்தவ
ன் றனது, வாமமா ரிமய வல்லியின் றுணைநாள் வழிபடு சங்குல்வா ன
வரு, நாமநீர் வேலி யுலகுளோ ரெவருஞ் சிவநிசி யெனநவின் றிடவும்

இச்சிவ ராத்திரி நோற்றியாவரா யினுமுன் னிலையடித் தாமரை கருதிப்
பச்சிமத் தடைந்த பரிதிபூ ருவத்திற் பருப்பதத் தகிர்த்திடு மளவு
நச்சிநற் பூசை புரிந்தவர் முத்தி நண்ணவும் வேண்டுமென் றிரப்ப
வுச்சியின் மணிசேர் முரகபூ டணனு முமையவட் கவ்வர மளித்தான்.()

ஆதலாற் சிவராத் திரியெனு நாம மனைவரு மறைந்திட நிகழ்ந்த,நி
தலாற் பரம னிரவினிற் றோற்ற மின்னுமோர் காரணமுளதென், றோ
தவா திருமுலகுளோர் பொருட்டா யுறுவர்கேட் டெவந்தன ரூருகச்,
சூதமா முனிவன் வியாதன்முன் மொழிந்த சொற்படி சொல்லுவான்
றுணிந்தே. (௨௭)

பின்னுமோர் கற்ப விறுதியி னிரசப் பிரமமென் கமலவீட் டிருக்கு
மன்னவா கனனு முலகுமா ருயிரு மழிந்திடு மற்றைநா ளிருண்ட, வண்
ணமா முகில்க ளீண்டியோ ரேழு மறிகட் னீர்முகந் தெழுந்து, முன்ன
மேபொழிந்த பிரளயப் புயல்வான் முகட்டள வளவிமூட் டியதால்.()

வறிலா னுயிருக் குயிரதா யிருக்கு மொருபொரு ளொப்புட னுயர்வு
வேறிலான் கண்ட பூரண மான வெறுவெளி வெறுத்தெதி ரடக்கு
மாறிலா னிமய மலைமக டனைத்தன் வாமமீ திருத்திஞெனன் வாழ்நா
ளீறிலா முதல்வன் யாவரு முய்ய யோகமுற் றிருந்தன னிப்பால்.(௨௮)

காளிபிர் தளபக் கண்ணியு மணியுங் கவின்பெறப் புனைந்திடுங் கரிய
மேனிய னளித்த சராசர மனைத்து மீளவும் படைப்பதற் கெண்ணி
யூணிமி ருடற்செங் கட்பெருங் கேழ லுருத்தரித் தாழ்ந்திப ருலகைக்
கூனிய மருப்பிற் றாங்கியப்புனலுட் குளித்துமீ தெடுத் துயர்ந்ததற்பின்.

சரிதிசைக் கிரிக ளெட்டுமென் டிசையிற் றனம்பிடவ் வகைமுத லெட்டி
விரிகதிர்ப் பசும்பொற் கொடுமுடி விளங்கு மேருவை நிலைபெற நிறுத்திப்
பரிவுறு முயிர்க ளனைத்துமீ ரேழு புவனமும் பண்டுபோற் படைத்தற்
குரியநான் முகத்துக் குரவனை விரவு மூந்தியம் போதிறு துதவி. (௩௧)

பங்கயத் தயனைக் கடைக்கணித் துலகம் பண்டுபோற் படைத்திட்
ப் பணித்துத், தங்கவேற் றடங்கட் டிருமகள் கருகி தழித்திடுந் துணைப்
புதம் வருட, வெங்கண்மா மணிச்சூட் டரவணைப் புறத்த வெண்டிரைப்
பாற்கட லடுவ, ணங்கண்மா ஞால முழுதுமுன் டுமிழ்ந்த வமலனா
றிதுயில் புரிந்தான். (௩௨)

டந்தியி லுதித்த நான்மறைப் பிரம னுணக்குமுக் காலமு முணர்ந்து
புந்தியிற் றெளிந்தி ரேழுல குடனே புலவர்கச் சுருவர்திம் புருடர்

வெந்திற லரக்க ரியக்கர்வா னசுரர் விஞ்சையர் கருடர் பைசாசர்
முந்திய சித்தர் மனுடர்கீ ரேகர் முனிவரர் முதன்முதற் படைத்தே.

பூதியமைந்தி னனுபவம்பொருந்திப் பொருவின்முக்குணங்களிற்றழுவி
யாதியிற் புகனேன் கிருபதின் மேனான் கசுமந்தனூ ருயிர பேத
மோதிய யோனி நாலிடத் துதிப்பித் தொற்றையா ழியந்தடந் தேரூர்
சோதிவா னிரவி குளிர்கதி மதியுந் தோற்றுவித் தனனனத் தவசன்.

பாருல கெவையுஞ் சராசரத் தொகையும் படைத்தபின் பண்ணவர் முதலாய்ச், சீருல விடுமீ ரொன்பது கணமுந் திரண்டிரு மருங்குசேவிப்பச், கூருல வியவெள் ளெயிற்பெரும் பேழ்வாய்க் கோளரி சுமந்த பொற் றவிசிற், காருல வியமைக் குழற்கருந் தடங்கட் கலைமகள் கொழுநன்வீற் றிருந்தான். (௧௫)

பின்னரோர் தினத்திற் றன்வகுத் தமைத்த பேருலகனைத்தையு நோக்கச்
சொன்னமாகரங்கள் சூழ்வரவெழுந்து துலங்குமேலுலகுபாதலங்கள்
பொன்னவிர் குடுமிப் பூதர முதலாப் போயவன் கண்டுடல் புளகித்
தென்னினின் முதல்வ ரினிப்பிறரொருவ ரிலனெனுமிருஞ் செருக்குற்றே

உளமிகத் தருக்கிக் கொண்டுமண் டலம்பண் டுண்டவன் றன்னை யங் கனிவாய்த், தளரிடைக் கரிய கன்னையங் தடங்கட் டாக்கணங்கின்றவன் சரமாத், துளவணி மருமத் தரியர வணையிற் றுணைவிழி முகிழ்த்தறி துயில்செய், கிளர்செம்ந் தமரத் திரைமணி கொழிக்குங் கீரவா ரிதிமருங் கணைந்தான். (௧௭)

விண்ணினின் றிழிந்து முதிர்ந்து சூற் கார மேகமொன் றமிர்தசாகரத்தி, னண்ணிய தெனவே கெட்டுடற்பருவாய் ரகுமணிச்சுடிகைவா ளரவிற், புண்ணிய முதல்வன் யோகநித் திரைமுன் புரிவது கண்டுளம் பொறாமை, லெண்ணிகின் றடர்ந்த கண்படை வளர்வோன் யாவனீ யெழுந்திரென் றிசைத்தான். (௧௮)

வேறு.

அசலந்தனி லலர்மின்பயி லமலன்றுயி லொருவி
யிகல்கொண்டிவை பகர்கின்றனை யார்நீயென வினவப்
புசலம்பா முலகும்பர்கள் புவனங்கனல் பவனஞ்
சசலந்தனி யுதவும்பொரு டானென்றுரை தந்தான். (௧௯)

பூவுந்தியில் வந்தோனிவை புகலப்புய லனையான்
றாவுந்திரை தவழுங்கட றனையெண்டிசை வளைபார்

மேவும்பல வுயிரும்பர்கள் விதியிங்குனை முதன்மற்
றியாவுந்தரு பாதத்தவன் யானென்றனை செய்தான். (௪௰)

மறைநாலுமென் னுவுற்றது மண்கால்புனல் விண்டீ
திறைவாகிப் பொருள்யாவுமென் னினைவின்படி படைப்பே
னிறையாகிய பரதத்துவன் யானல்லது நீயென்
றறைவாயிறி வற்றாயென வயனுங்கழ றுற்றான். (௪௧)

அக்காலையி லிருவோரையு மடர்மாயை மறைக்கப்
புக்காருணர் வில்லாரமர் பொருவார்முயல் பொழுதிற்
கைக்கார்முக முனிவுற்றெதிர் கண்ணன்குனித் திட்டுத்
திக்கானைகள் வெருவும்படி சிறுநாணொலி செய்தான். (௪௨)

வலிசேர்புய நெடுமால்கர மருவுங்கொடு மரநா
ணொலியாலர வரசும்பர்க ளுடனுட்கிட வுவரார்
கலியார்கிடை யனல்காலிளர் காலந்தனை யொப்பச்
சலியாதட லுடனின்றடு சரமாரி பொழிந்தான். (௪௩)

கடுத்தானுருத் தெழுந்தாலெனக் காயுங்கத மிகவர்
தடுத்தான்முத லகிலஞ்சுடு மயிலம்புகள் பலவும்
விடுத்தானவை நீடுகாதயல் விலகும்படி விரைவிற்
றடுத்தானொரு குலசகொண்டயர் சலசத்தவி சுறைவோன். (௪௪)

சிறித்திசை முகனீடிய சிறையோதிம மதன்மே
லேறிப்பல படைமந்திர மெடுத்தோதினன் விடுத்தா
னூறித்தரு கருணைக்கட லுவணப்பு ளுகைத்தே
நூறிச்சில கணைகொண்டொரு நொடியிற்றுகள் செய்தான். (௪௫)

கண்டந்தண னிவனுகமொர் கடிகைப்பொழு தளவிற்
றுண்டஞ்செய்வ னென்றேழ்கடல் சுவறச்சுரர் பதற
வண்டங்கள் வெடித்துட்கிட வசனிக்குல மானும்
தண்டொன்றது கொண்டங்கரி தட்மார்பி லெறிந்தான். (௪௬)

முதிரச்சின மெதிரச்சுதன் முடுகுங்கதை கடிதிற்
பிதிர்பட்டெதிர் தரமைப்புயல் பிளிறுற்றிடு மொலிபோ
லதிரப்பொரு செருவிற்றின மட்டாட லரக்க
ருதிரப்பிண முடைகாறிடு மோர்தண்டுமு னுய்த்தான். (௪௭)

விண்ணுடெரி கதுவத்திசை விரியுங்கடல் சுவறத்
தண்ணார்மதி தபனன்றிசை தடுமாறினர் திரிய

மண்ணுட்டழி வுற்றும்பரு மடியும்படி மறமுற்
றெண்ணுதமர் பொருதிட்டன ரீரைம்பது வருடம். (௪௮)

பொருதிப்படி பலவுற்றிடு போதிற்றிரு பார்ப்பன்
சுருதிக்கிறை வனசென்னி துணிக்கும்படி செஞ்சிற்
கருதித்துணை விழியிற்கனல் காலக்கனல் காலும்
பரிதிப்படை விட்டானது பலியாதுறல கண்டே. (௪௯)

சூரமாமுசத் துருமேவிவிக் கொள்வாலகொதித் துத்தன்
சரமானதங் கெடுத்தேவினன் றனியாடவிற் குனித்தே
திரமாமுக மொருநான்குள செழுநான்மறை யவன்றன்
வரமார்கணை விடுத்தானவளர் வடவைக்கன லான. (௫௦)

பெண்டான்முடி கொண்டானிடம் பெற்றுனுத விற்றீ
கண்டாலுறு மென்போலிறை கண்டானகன் மண்டா
நுண்டாலுறு நண்டாகித மொண்டாயனை யுறைமேவான்
றண்டாலுறு வண்டான்முதிர் சமரம்பொரு தமரம். (௫௧)

கடுவெஞ்சின மொடுதப்படை விடுகின்றனர் கடிதின்
நடுவெங்கள மிசைசூழ்ந்தவ ரிடம்புய னெனவே
கடுவெங்கனல் சிகைகொண்டெழு சுடரின்றிரள் வடிவாய்
நடுநின்றவன் மதியம்பொதி களிர்செஞ்சடை முதல்வன். (௫௨)

எறிக்குங்குட மாதத்தினி லிலகும்பிறை குறையத்
தொடுக்குந்திதி பன்னான்கெனச் சொல்லுஞ்சதுர்த் தசியி
னடுக்கங்குலி னப்பேரொளி கண்ணுற்றயி னன்னோர்
விடுக்கும்படை யாவையும் வெந்திட்டன மாதோ. (௫௩)

வேறு.

நின்மலை தனக்கு மூதத நிலைமா மலைக்கும் வேதப்
பொன்மலை தனக்கு நாப்பட் புரைதவிர் பதும ராக
மன்மலை நின்ற தென்ன மாறுகொண் டவர்தம் மிற்றுஞ்
சொன்மலை வுறாத வண்ணந் தோன்றிய சுடரைக் கண்டார். (௫௪)

பங்கயத் தயன்மால் விண்ணோர் பார்த்தகட் புலத்துக் கெட்டா
தங்கவர் மனத்தி னுலு மளவிடற் கரிய தாகிச்
செங்கதிர்ப் பரிதி கோடி திரண்டொரு வடிவாய்க் கூடிப்
பொங்கொளி விரித்தா லென்னப் பொலிந்தபே ரொளியை நோக்கி,

அதிசய மடைந்து நீண்ட வழற்பிழம் பாகி நிற்கு
மிதனடி முடிகள் காண்பா னிருவரு மிசைந்து தம்மிற்
கதிதரு மடிக டேடக் கடவனென் றேன மாகித்
துதிபெறு முகுந்தன் கீழேழ் தொன்னிலங் கீண்டு சென்றான். (௪௬)

கன்னமா மதங்கள் சிந்துங் கரிமுத லாக முன்னோர்
சொன்னவா ருயிர்க ளெல்லாந் துணுக்கிடப் பவளச் செங்கா
லன்னமாய்ச் சிறைக்கான் மேரு வசைத்திடப் பறந்து வாச
வன்னவா ரிசத்தோன் வானின் மணிமுடி தேடிப் போனான். (௪௭)

மருவருந் துளவ மாலு மலர்மிசை வதிகின் றோனு
மிருவரு மநந்த கால மிறந்திட வினைத்த தன்றித்
திருவரு மழலின் செய்ய சேவடி முடிகா ணாமல்
வெருவரு மனத்த ராகி வெள்கினர் மீள்கின் றாரால். (௪௮)

கூடியங் கிருவர் தாமுங் கோலநீ டொளியை நோக்கி
யாடியி லிடங்கும் வெற்பி னமர்ந்துய ரன்ப ருள்ளத்
தாடிருந் தருள்வோய் நின்னை யுணர்ந்தில மெமது சென்னி
சூடியாம் வாழ வின்று னிணைப்பதங் காட்டு கென்றார். (௪௯)

மாசிமா தத்திற் றேன்று மதிக்கலை குறைந்து தேயு
மாசில்பன் னான்காம் பக்கத் தரையிரு ளியாமந் தன்னிற்
றேசினால் விளங்குஞ் சோதிச் செஞ்சுட ராகி நின்ற
காசிலா நுதற்கட் பெம்மான் றனதுருக் காட்டி னின்றான். (௫௦)

நீலகண் டமுமெண் டோளு நெற்றியிற் கண்ணு நீறுங்
காலனைக் காய்ந்த காலுங் கையின்மான் மழுவுங் கண்டு
மாலவன் வாமந் தன்னின் மலரயன் வலப்பா னின்று
சூலபா ணியினை நோக்கித் துதிபல சொல்ல லுற்றார். (௫௧)

ஓதியா வணுவா யெண்ணி லுயிர்க்குயி ராகி யென்றும்
பேதியாப் பரம தாகிப் பிறப்புட னிறப்பி லாமற்
சோதியா யெழுதாக் கேள்விச் சுருதியின் முடிவா யெங்கட்
காதியா யநாதி யாகு மடிகணின் னடிகள் போற்றி. (௫௨)

விடைக்கொடி யுயர்த்தாய் போற்றி விரிமலர்ச் செழும்பொற் கொன்றைத், தொடைப்புயா சலனே போற்றி துலங்குபொற் றொட்டிற் றூவும், படைக்கருங் கடைக்கட் செவ்வாய்ப் பைந்தொடி பங்கா போற்றி, சடைப்பரம் பரனே போற்றி சங்கரா போற்றி போற்றி

விரித்துல கனைத்து மாக்கி வீக்குநாட் சராசரங்கள்
பரித்துள புவன மூன்றும் பாலநேத் திரத்தீ யூட்டி
யெரித்துநீ றாக்கிப் பூசி யென்பணிந் திலங்கு சூலந்
திரித்துநின் றாடி நின்பொற் சேவடி போற்றி போற்றி. (௬௪)

இலகொளிக் கதிரோன் றாகி யீர்ம்புனற் கும்பந் தோறும்
பலவுரு வாகித் தோன்றும் பான்மைபோ லங்கங் காய்நின்
றுலகுயிர்க் கறுப வங்க ளூட்டுவித் தொழிந்த காலத்
தலகிலாக் கருணை நல்கு மமலனே போற்றி போற்றி. (௬௫)

அருவமா யுருவ மாகி யகண்டமா யசல மாகி
யொருபரம் பொருளாய் விண்ணை யொப்புட னுயர்வு மின்றி
நிருமல னாகி யெங்கு நிறைந்துநீங் காது நிற்குங்
கருதரு ஞான னந்தக் கருணையங் கடலே போற்றி. (௬௬)

காலனார் வீழத் தாக்குங் கனைகழற் காலா போற்றி
மூலமாம் பொருளுக் கெல்லா முழுமுதற் பொருளே போற்றி
பாலநேத் திரனே போற்றி படர்திரைப் பாலின் வேலை
யாலமுண் டிருண்ட கண்டத் தண்ணலே போற்றி போற்றி (௬௭)

பொடியெழப் புரமோர் மூன்றும் புன்னகை கோட்டிச் சுட்டாய்
கொடியின்மீ தெழுது வேளைக் குளவிழி யழலிற் கொன்றாய்
படிமுதற் ககன மீறாப் பரந்தியாம் பரிந்து தேடி
யடிமுடி காண்டற் கெட்டா வத்தனே போற்றி போற்றி. (௬௮)

நீர்வடி வான செய்ய நெருப்புரு வுலவை வானம்
பார்வடி வாகத் தோன்றப் படைத்திட முன்னை யன்னுங்
கார்வடி வான கூந்தற் கவுரியு நீயு மொன்றாய்ப்
பேர்வடி வின்றி நின்ற பிஞ்ஞகா போற்றி யென்றே. (௬௯)

வார்ச்சிலை யுண்டென் றேறுதற் கேதுவா மிடையாண் மாரன்
கைச்சிலைப் புருவ மைக்கட் கவுதமன் பன்னி கொண்ட
மைச்சிலை யுருவ மாற்று மலர்ப்பதன் வடத்தண் டார்ந்த
பச்சிலைப் பள்ளி யானுட் பரிவுடன் பழிச்சி யேத்த. (௭0)

மருவிரி கமலப் போதின் மன்னுநான் முகத்தோன் வெற்பி
லருவிபோல் விழிநீர் சோர வாகநெக் குருகி யன்பாற்
றருவிரி மலர்க டூவித் தமனியச் சபையி லாடும்
பொருவிரி கமலச் செம்பொற் பூவடி போற்றி செய்தான். (௭௧)

வேறு

நிலத்தானைக் கடுவொடுக்கு மிடற்றானை மழுத்தானை நீங்காச் செங்கை, வலத்தானை மலைமகள்சே ரிடத்தானை வரிசிலைக்கை மதனைக் காய்ந்த, சலத்தானை யெண்புயா சலத்தானைத் தனைச்சூழத் தருக்கி வாழ்தெவ், புலத்தானை யுதைத்தமலர்ப் பதத்தானைப் போற்றிசெய்தார் புலவரெல்லாம். (௭௨)

கந்தரஞ்சேர் கந்தரத்தான் கருணைவிழிக் கடையருளிக் களிப்பினோடு, மந்தரவா னவர்புகழ்புள் ளரசுகைக்கு மச்சுதனை யரிதே னுண்ணுங், கொந்தவிழ்நாண் மலர்க்கமலத் தவிசிருக்கு நான்முகனைக் குறித்து நீவிர், சிந்தைதனில் விழைந்தவரங் கேண்மினது தருவலென்று செப்பலுற்றான்: (௭௩)

கரியெனநின் றுயிர்க்கருள்செய் கண்ணுதனீ கனற்பிழம்பாய் நின்ற காலை, விரிசுடர்விட் டெழுமொளிசேர் விளக்கில்விழும் விட்டிலென வீழ்ந்து நீறு; பொரியுமெம தத்திரம்த னீங்கெமக்கு மீண்டுதவி யாக்க னென்றும், புரியுமிரு தொழிலுமிலை பெறவுனருள் புரிதியெனப் போற்றினின்றார். (௭௪)

அன்றிரவி லிருவீரு முடியாமற் சோதிவடி வாயா னும்மு
னின்றவிராச் சிவசிவயா மனசிவரா டனில்விதித்த நியமத் தோடு [வா
மன்றன்மலர் கொடுபூசை புரிந்திடினீர் நினைந்ததெலாம் வழங்கல்செய்
தென்றயன்மா லிருவருக்கு மனமகிழ வரமளித்திட் டியம்பும்பின்னும்.

ஆதியிலம் பிகைநோற்ற விரதமிதன் பெருமையெவ ரளக்க வல்லார்
சாதிமுறை நெறிதவறுஞ் சண்டாளர் நோற்றிடினுந் தக்கோ ராகி
மோதிவருங் கடல்புடைசூ ழுலகில்விரும் பியபோக முற்றிப்பின்னர்ப்
பூதிதரும் பெரும்பாவக் கடல்கடந்து முத்திநெறி பொருந்து வாரால்

ஆவிந்த மறையவர்கட் களித்தாலும் புரவிழுக மாற்றி னாலு
மேவிந்தச் சிவநிசிபோற் பலன்றாரா வெனவியந்து விண்ணினோங்கு
மாவிந்த நடைபயின்று வந்தனைய கரியுரித்த வரதன் வாமக்
கோவிந்த னரவிந்தன் கோவிந்தன் முகநோக்கிக் கூறிப் போனான். ()

உலங்குலவும் புயமுகுந்த னிவ்விரத நோற்றுயிர்காத் தூடற்றுப் போரிற், சலங்குலவு மரக்கர்குலச் சலதிவட வையிற்சுவற்றுந் தானை பெற்றுப், பொலங்குலவு மிதழ்விரிந்து தேன்றுளித்து வழிந்திடுமம் புயப்பொற் பூவி, னிலங்குலவு மயிலைமணந் திமையவர்கண் முதலெவர்க்கு மிறைவ னானான். (௭௮)

நல்லுணர்வுற் றுயர்கமல நான்முகனேற் றுலகமுதல் வீசையிற்றேற்றும், பல்லுயிரு நினைத்தமனப் படிபடைத்துத் தனதுகரப் படையும் பெற்றுச், சொல்லுமறை முழுதுணர்ந்து தூவிபணப் புள்ளூர்ந்து சுணங்கு பூத்த, வல்லுறழ்மைக் கருங்கண்முலை வாணிதனை மணந்து பெரு வாழ்வு பெற்றான். (௭௯)

நிதானுந் திசைமுகனு நோற்றதற்பி னிவ்விரதஞ் சிறந்த தெங்கு
மோதவரு மாகமதிச் சிவநிசியுற் பவமீதென் றுணர்வீ ரென்றே
மாதவத்தி னுயர்சனகன் முதலானை மிசவனத்தோர் மகிழ்ந்து கேட்பச்
சூதமுனிவரனிகழ்ந்தசரித்திரத்தைவிரித்தெடுத்துச்சொன்னானன்றே

சிவராத்திரியுற்பவச்சருக்கம் முற்றிற்று.

சிவராத்திரிமான்மியச்சருக்கம்

சொன்ன சூதனை நோக்கியவ் வனத்துறை துறவர்கண் மறைகூறு
மன்ன மாவிர தத்தினை நோற்றிடு மடைவுமன் றரன்றாளிற்
பன்னு மாமல ரிட்டருச் சனைபுரி பரிசுநீ பரிவோடி [றான்.
றின்ன வாறென விரித்தெமக் குரைத்தியென் றிரப்பவங் கிசைக்கின்

மாக மாமதிச் சிவநிசி யுற்பவம் வகுத்துரைத் தனமிப்பா
லாக வத்துட னைந்துள தானிரா வவற்றைநீ ருணர் வீரால்
யோக ராத்திரி சோமவா ரத்தினன் றுதயகா லையிலேதொட்
டேக மாகவந் நிசிக்கடை யளவுவா விசைந்திடி லிதுவாமே. (௨.)

திங்க ளின்கலை குறைசதுர்த் தசிமதிக் கிழமையிற் றிசழல்லிற்
றங்கு சாமநான் களவுதொட் டிருந்திடிற் சயிலமீன் றருண்மானைப்
பங்கில் வைத்திடும் பரமனைப் பூசனை பண்ணுக பரிவோடு
மிங்கு ரைத்தவா கமங்கண்மற் றிதனையும் யோகராத் திரியென்றே.()

ஈறு வந்தசா மத்தனா நாழிகை யிருளுவா விருந்தாலுந்
தேறு கின்றவச் சதுர்த்தசி யப்படிச் சேரினுங் கொளல்வேண்டு
மூறு நீர்தவத் துறவிர்காள் விதிமுறை யுரைக்குமிங் கிவைநோற்கிற்
கூறு மற்றுள சிவநிசி விரதமுக் கோடிநோற் றிடலொக்கும். (௪)

பருவ மாறுள வருடமோ ரொன்றுறு பன்னி ருமதிதோறு
முருவ மாமதி நிறைந்தது குறைந்திடு மோரிரு பக்கத்து

மருவு மாசதுர்த் தசியறு நான்கினு மோற்பது வழக்காகுந்
திருவ மர்ந்தமா தவரிதை நித்திய சிவநிசி யெனச்சொல்வார். (௫)

அதிக மாகமா தத்தினிற் குளிர்கதி ரம்புலி குறைபக்கத்
திதிபஞ் ஞான்குமீன் றிங்கண்முற் றிரிதியை சித்திரை மதிதேயு
மதியி னட்டமி யிடபமா தத்துமுன் மருவுமட் டமிமாசில்
பதிக யாழ்மதி மதிவளர் சதுர்த்தியாம் பகர்ந்தகற் கடகத்தில். (௬)

விரியும் வெண்ணிலாக் கலைகுறை பஞ்சமி விளங்குமா வணிதன்னிற்
பரியுஞ் சுக்கில பக்கவட் டமிபுரட் டாதிமுற் பதின்மூன்று
மரிய வைப்பசிக் கம்புலி வளர்திதி யாறிரண் டறைதேளிற்
றெரியு மூற்பமு சத்தமி பிற்படு திதியிலட் டமிதானும். (௭)

ஓப்பின் மார்கழி யுபயபக் கத்தினி லுழுதிதி பதினான்குஞ்
செப்புமான் மதி வளர்மதி தனிலுறு திரிதியை யிவைகுலக்
கப்பு வேற்கரக் கண்ணுத லருச்சனைக் குரியவா கமமெல்லாந்
தப்பி லாதெடுத் திசைகொண்மா தச்சிவ நிசியெனச் சாற்றும்மே. (௮)

மாறின் மார்கழிச் சதுர்த்தசி யாதிரை மருவிலுத் தமமாகு
மூறி லாக்குடத் திங்களிற் குளிர்கதி ருமெபதி குறைபக்கந்
தேறி னின்றிடு சதுர்த்தசி ருசன்கதிர்க் கிழமையிற் சேர்வுற்று
லீறி னற்கதி கொடுக்குமுக் கோடியாஞ் சிவநிசிக் கிணையாமால். (௯)

உற்ற பன்னிரு மதியிலிவ் விரதகோற் றுளம்விழை தனமுன்னாட்
பெற்று ளோரயன் மாசியிற் கேசவன் பிறங்குபங் குனிதன்னிற்
சொற்ற சித்திரைத் திங்களிற் பார்ப்பதி சூரியன் விடைமாதத்
தற்ற மற்றிடு மிதுனமா தத்தர ஞடியிற் குமரேசன். (௰)

சிங்கத் தம்புலி கன்னியிற் சேடனிந் திரனெடுந் துலைத்திங்க
டங்கு கார்த்திகை நாமக டனுமதி தனின்மகேந்திரன் மனிதையிற்
றுங்க மாரிமி லிடபதே வன்பசுஞ் சுகமொழி யுமைவாம
பங்க னீடரு டங்கிடத் தக்கநற் பக்கராத் திரிசொல்வாம். (௧௧)

மகர திங்களி னபரபக் கத்திடை வருபிர தமையெய்தப் [தாரிப்
புகலு மன்றுதொட் டெதிர்ந்தபன் மூன்றுநாட் புசிப்பதோர் பொழு
பக்கர்த ரும்பதி னைன்கினி னேற்பது பக்கராத் திரியாகு
மிகப ரந்தரு விரதமற் றிதற்கிணை யாவரோ புகல்கிற்பார் (௧௨)

அருட ருஞ்சிவ ராத்திரி யிப்படி யைந்துபட் டதுவாகு
முருத் கர்தலோ டைக்கதையு மோற்றனன் றுரைத்தவை முடியாதேன்,

மருவு மிங்கிதி னென்றனை விதித்திடும் வரன்முறை வழுவாமற்
பெருகு மன்புட னேற்றவர் பெறற்கரும் பெருங்கதி பெறுவராால

ஊதை முன்படு பஞ்சியி னுறுவினை யோட்டிமேற் பதஞ்சார்வான்
கோதை பங்கன தருட்கடற் குளித்திடுங் கோதறு குணத்தீர்கா
ளேதை யாமெடுத் துரைப்பதிங் குமக்கினி யிமையவ ரறியாரிப்
பேதை மானுட ரறிவரோ சிவநிசிப் பெருமையின் றிறனம்மா. (கச)

வேறு.

மத்தகமால் களிற்றுரிவை போர்த்துழுவை யுரித்துடுத்து மதியஞ் சூடும், வித்தகனீ னிறமிடற்றுச் சிவனிரவா கியவிரதம் விளங்க நோற்கி, லுத்தமமத் திமாதம மெனவொருமூ வகைப்படுமா லொழுங்கிற் சொல்வன், முத்தமுல்வேட் டிடுமுனிவீர் கேண்மினெனச் சூதமுனி மொழிவ தானன். (கரு)

விரித்தசெழுங் கதிர்ப்பரிதி மேற்றிசைபோ யந்திவந்து மேவுங் காறுந்
தெரித்ததிர யோதசியாந் திதிநின்று பின்புசதுர்த் தசிதான் கூடித்
தரித்தவிரா வன்றிமற்றைப் பகன்முழுதுந் தங்கியிடிற் றறுகட் டங்கி
யுரித்தபிரா னிரசனிக்கு ளுத்தமத்தி லுத்தமமா யுரைப்பர் மன்றே. ()

உதித்தகதி ரத்தமித்த பின்கூடுஞ் சதுர்த்தசியுத் தமமா மென்பர்
துதித்தவுத யாதியுத யாந்தமதாய்ப் பகலிரவு தோய்ந்து நிற்கும் [ன்
கதித்தசதுர்த் தசிகதிரத் தமிக்குமுன்சேர் சதுர்த்தசிநற் கங்குற் போதி
மதித்தபத்து நாழிகையிற் பின்கூடுஞ் சதுர்த்தசிமத் திம்மா மன்றே. ()

அல்லினிரு பதுகடிகை யளவுசதுர்த் தசிதானின் றதற்குப் பின்னர்ச்
சொல்லினுயர் மதிபரிதி யுடன்கூடு மமாவாசை தொட்டத் தோடு
புல்லியிடி னதமசிவ ராத்திரியா மெனவெடுத்துப் புகல்வ ரல்லி [மால்.
னல்லியல்சேர் பதின்மூன்றாந் திதிதொட்ட சதுர்த்தசியே நன்ற தா

கங்குறனிற் பதின்மூன்றாந் திதியுடனே சதுர்த்தசியோர் கலைதான் கூடி
லங்கதுவே சிவநிசியாக் கொளல்வேண்டுஞ் சிவரூப மாகு மேன்மை
தங்குசதுர்த் தசிதிரயோ தசிசத்தி ரூபமிவை தாமொன் றாகித்
துங்கமுறக் கூடுமிராச் சிவலிங்கா காரமெனச் சொல்வர் மன்னோ. ()

ஆசிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதா னவியக லங்கம் போலாம், பேசுமதிற் பூசைசெய்யிற் பிரமகத்தி தோடமுண்டாம் பிறங்கு மத்தத், தேசமுழு வதுங்கெடுமூற் புண்ணியம்போஞ் சிந்தைசெய்யிற் றீ

டுக்கிட் டுள்ளங், கூசுகர கங்கடனிற் கொடியவிர வுரகமதிற் குளிப்பா மரதோ. (உ0)

ஒன்றிலமா வாசைதொட்ட சதுர்த்தசிவை திகர்விரதத்தர்க் குரிய வாகுங், கூற்றுபுகழ்ச் சைவர்முன்னாட் கொளல்வேண்டுந் திருவோண ங் கூடிநிற்கு, மாற்றிலமா வாசைதொட்ட சதுர்த்தசிதான் விரதத்தருக்கு ம் வாழ்வின் மிக்க, தூறில்கிர கத்தருக்கு மாகுமமா வாசையெனுந் தோட மின்றே. (உக)

அற்றமிலத் தாத்திரிமுன் சதுர்த்தசியோர் கலைகூடி லன்று கொள்க, செற்றமிலச் சதுர்த்தசிகள் ளிரவினிற்பின் னொருகலைதான் சேடித் துற்றான், மற்றநாட் கொளல்வேண்டும் வைதிகரும் விரதத்தர்களு மதிக்கும் பக்க, மூற்றநுதா னிரண்டுபடி லிரவிலதி கத்திதிதா னுசித மாமே. (உஉ)

திதித்திரயஞ் சேர்ந்தவரில் வைதிகர்க்குஞ் சைவருக்குஞ் சிறந்த தாகு, மதிக்குமற்றை நிசிக்கடையி லமாவாசை கூடமுதன் மழுமா னேந்து, கதிச்சடையோன் றனைப்பூசை புரிந்திடுதல் சைவருக்கு நன் றாமென்றே, விதித்தனரான் மதிக்கிழமைச் சதுர்த்தசிக்கு மிந்தமுறை வேண்டுந் தானே. (உங)

அற்றனின்மூ வைந்துகன்ன லாமளவிற் சதுர்த்தசிமுற் றினத்திற் கூடி, மற்றைநா ளிரவுபதி னைந்துகன்ன லளவினுவா வந்தொன் றாகி, யுற்றிடிற்பிற் றினந்தனிலே பூசைபுரிந்திடலாகா தொழிகமுந்தச், சொற்றதினத்தருச்சனைசெய் திடவிதித்தார்சைவநெறித் துறைநின்றோரே.

முற்றிதியி லோர்பொழுதுண் டிடையில்விதித் திடுந்திதியின் முழுது முண்ணா, திற்றிதனிற் றுயிலொருவி யேயிறறி தனைப்பூசித் தியாம நான்கும், பிற்றிதியிற் சிவனடியருக் கன்னநல்கிப் பாரணந்தான் பின்னர்ச் செய்யச், சொற்றிடு மாகமமாதச் சிவநிசிநோற் றிடக்கருதித் துணிந்து ளோர்க்கே. (உரு)

ஓதவருஞ் சோமசிவ நிசிதனக்குச் சதுர்த்தசியி னுண்டு வாவிற் றுதவிழ்பூங் கொன்றையணி வேணியனைப் பூசைசெய்து சாமநான்குந் தீதகன்ற பிரதமையிற் பாரணஞ்செய் திடவேண்டுஞ் செப்புமைந்து பேதமுள்ள சிவநிசிக்குட் சதுர்த்தசிசங் கரனிரவாய்ப் பிறங்கி நின்றால்.

இன்னசிவ நிசிவிரத நோற்றிடுவோர் முற்றினத்தி லெய்தா நின் வன்னதிர யோதசியி லொருபொழுதுண் டரிவையர்தோ ளணை

தவின்றிச், சொன்னவிர வகற்றியற்றை வைகறையிற் புனிதநீர்த் தோயத் தாடிப், பின்னர்தின மணியுதிக்குங் காலையிற்செய் கடனைத்தும் பிறழா தாற்றி. (உஎ)

மதிமுடியோன் கோயிறனை வலம்வந்து தண்டனிட்டு வணங்கியூரவாற்
றதிபுகன்றில்வயினேகி யிழிகுலத்தோர் பாதகர்பாற் றுன்னிடாமற்
கதியறுமற் றவருடன்வாய் பேசாமற் கண்ணினெதிர் கண்டிடாம
னதியிடைப்போய் நண்பகலி ஞனவிதி வழுவாது நன்னீ ராடி. (உஅ)

துய்யவெண்டோ கிரண்டுடுத்திட் டுச்சியிற்செய் கடன்கழித்துச் சுடலை யாடு, மையனைப்பூ சிக்குமிடங் கோமயத்தான் மெழுகியபின் னம்பொன் னுடை, செய்யதுகி லினைத்திரத்தால் விதானித்து வாழைகன்னல் சிறக்க நாட்டி, மையகனுண் மலர்மாலை தோரணங்க ணிரைநிரையின் வயங்க நாற்றி. (உகூ)

கண்ணுதலை யருச்சித்தற் குரியபொருளனைத்தினையுந் தருதித் தேடி, விண்ணுலவு கதிரருக்கன் மேற்றிசைவே லையின்முழுக வீழும் வேலை, தண்ணுலவு சந்தனநற் றூபதீ பாதியிம சயில மீன்ற, வொண்ணுதலோர்பாகனுறை சந்நிதியின் முன்னமைவை யுதவி யன்பால். (௩0)

அந்தியினிற் றண்புனலோய்ந் தருக்கியநற் கிரியைசெப மாற்றிப் பின்னர், வந்திளமா மதிமுடித்த வள்ளறனைப் பீடிகையில் வைத்துத் தாபித் திந்தியமோ னாந்தவித்திட் டாகமநூன் மறைகளெடுத் தியம்பா நிற்கு, முந்தியமந் திரங்களினாற் பூசைவிதி வழுவாமன் முடித்தல் வேண்டும். (௩க)

முன்னமுதற் சாமத்தி லானினைந்தா லாட்டிடுக முறைமை யாகப்
பின்னரிரண் டாஞ்சாமத் தைந்தமிர்தா லாட்டிடுக பிரசந் தன்னு
மன்னயஞ்சேர் மூன்றாய சாமத்தி லாட்டிடுக நாலாஞ் சாமங்
கன்னலின்சாற் றினிலாட்ட காரணவா கமமெய்த்துக் கழறிற் றன்றே.

ஆசகல்கோ சலந்தயிர்பால் கோமயநெய் கௌவியமைந் தாகுஞ் செந்தேன், காசகல்சர்க் கரைததிபா னெய்யிவையைந் தமிர்தமெனக் களாவரித்தை, மாசகல்கௌ வியம்போலத் தனித்தனியே தாபித்து மந்திரஞ்சூழ், மீசன்மணி முடிமீதி லாட்டிடவா கமநூல்க ளெடுத்துக் கூறும்

சந்தனமுற் சாமமதி லகிலிரண்டாஞ் சாமமதிற் சாம மூன்றிற்
கந்தமிகுங் கருப்பூரங் கடைச்சாமங் குங்குமஞ்செங் கமலப் போதில்

வந்திருவீன் முகனமுந்தன் மகபதிவா னவரெவரும் வணங்கியேத்து
மந்தமிலா முழுமுதல்வன் றிருமேனி குளிரமிகு மன்பிற் சாத்தி. (கஎ)

முற்சாமம் வில்வமதிற் பிற்சாம முளரிமலர் மூன்றாஞ் சாம
நற்சாதி மலர்நாலாஞ் சாமமதி னந்தியா வர்த்தப் பூக்கொண்
டற்சாருங் களத்தின்றக்குச் சாத்துகவென் றாகமத்து ளதிக மான
சொற்சார முள்ளசித்தத் தந்திரநா ளுருகுத்திதனைச் சொன்ன தாமால.

முண்டகமுற் சாமமதிற் றுளசியிரண் டாஞ்சாம மூன்றாஞ் சாமக், கண்டகஞ்சேர் கூவிளமுந் தளைகிளைநான் கெனப்பகுத்த கடையிற் சாமம், விண்டலர்ந்த மதத்துளிக்கு முற்பலத்தின் மலர்சாத்த வேண்டு மென்றே, யண்டரொலாம் புகழ்ந்தேத்துஞ் சிந்தியமா மாகமநூ லறைந்த தன்றே. (கஅ)

வில்வமொச்சி மாவிலங்கை மூட்கிளுவை வெள்ளில்பஞ்ச வில்வ மாகச், சொல்வரிவற் றின்றளைமுக் கிளையாகக் கொண்டயன்மா றொடர்ந்தங் கூணு, நவரதன் றிருமுடியி னுன்குசா மமுஞ்சாத்த நன்று மீது, கல்வியறிந் தவருணரக் காரணவா கமமுரைத்த கருத்தா மன்றே.

எதழின்முற்சாமமுற்கப்பருப்பொடன்னமாகுமற்றையிரண் டாஞ்சாமந்
தீதகல்பா யசமாகுஞ் சாமமொரு மூன்றதனிற் றிலஞ்சே ரன்ன
மோதவரு சாமமொரு நான்கதனிற் சுத்தான்ன முறைத்தார் பூத
நாதனிவே தனந்தனக்குச் சுத்சான்ன மாஞ்சாம நான்கிற் கும்மே. ()

சருவஞ்ஞனே யுக்கிரனே சங்கரனே சிவனேசாம் பவனே சான்றாய்ப்
பெறுசகிலை நல்கிடுமீசானனேமகவுக்கிரனே பேசு
மறுவறுபூ சாதிபதி யேயென்னு மந்திரமோ ரெட்டு மோதி
யுறுதியுடன் றூபாதி நிவேதனங்க ளனைத்தினையு மொழுங்கிற் செய்தே.

நாமத்தினிருக்கெனுஞ்சொன் னுட்டமெனமுந்தவந்த நன்னூனஞ்சாமந்
தோமத்தினைகற்றிரண் டாஞ் சுருதியிரண் டாஞ்சாமஞ் சொற்றமூன்றாஞ்
சாமத்திற் சாமமறை யீற்றிலுறு மறைநாலாஞ் சாமந் தனனி
லீமத்தி னின்றுபி மாதிதிரு முன்னோதி யிருகை கூப்பி. (௨0)

உருகுமுளத் தடனிருந்து னொருவியிரு விழிதனிலு முறக்க மின்றி, யிருளுறுகங் குலின்யாம நான்கினுமிப் படியருச்சித் திறுதி தோறம், பொருவிலருக் கியக்கொடுத்து நாயடியேன் புரியுமிந்தப் பூசை தன்னைத், திருவுளத்தி னயந்தருள்வா யெனத்துதித்துத் தண்டனிட்டுத் திருமுன் வீழ்ந்தே. (௨க)

இன்னணந் சிவபூசை யியற்றியற்றைப் புலரிதனி லெழுந்துபோ
ய், கன்னதியிற் புனலாடிக் காலையிற்செய் கடன்கழித்து நவின்றவாறே,
யன்னதினத் தினும்பகற்போ தரனையருச் சித்ததற்பி னுதிதீக்கை, சொ
ன்னகுர வனைப்போற்றி யந்தணருக் காடையன்னஞ் சொன்ன மீந்தே

அங்கவர்த மனுமதியாற் பாரணஞ்செய் திடல்வேண்டு மற்றை வைகற்
றங்குபகற் கடனைத்துங் காலசந்தி யுடன்முடித்துத் தாழுங்கீழ்பாற்
செங்கதிர்வந் துதித்தாறு கன்னலுக்குட் பாரணந்தான் செயதா ரர்கிற்
றுங்கமுறுகவளமொன்றாக் கனந்தபலமுளதென நூல் சொல்லுமாதோ.

அலைசெறிபாற் கடல்விடமுண் டருள்வான்முப் புரந்தழலுக் களி
ப்பான் மேருச், சிலைகுனித்த சிவனிரவிப் படிநோற்போர் சிவகதியிற்
செல்வ ரன்றிக், கலைமுழுதுங் கற்றுணர்ந்த மாதவத்தி ரன்னவர்முற் க
ருவின் மூவேழ், தலைமுறையி லுள்ளவருஞ் சத்தியமுத் தியிற்சேர்த ற,
ப்பி டாதால்.

அறைமறைமந் திரவிதியா லருச்சிக்க விரகிலரே லன்ப ருள்ளத்
துறைபரம னைந்தெழுத்தை யுச்சரித்தி ரொட்டுவகை யுபசா ரத்தாற்
பொறைதருமன் புடன்பூசை புரிந்திடுக பொறிவளிகள் பூந்தா துது
நறைகமழ்செங் கமலமலர் நான்முகத்தோன் பூசையினு நயப்பனம்பன்

இத்தகைய சிவார்ச்சனைசெய் திடமாட்டார் விருத்தர்கொடி யிடை
யார் நோயுற்றடகற் சிவநிசியி லூனொடு துயினீத்துச் சாம நான்குஞ்,
சித்தமிகக் களிகூர்ந்து சிவபுரா ணங்கேட்டுச் செபங்கள் பண்ணி, முத்
தனுறை சினகரத்திற் சென்றரனைச் சேவித்தன் முறைமை யாமே. ()

அசிக்கஹுமை பங்கனைமுற் சாமத்தி லருச்சித்தாங் கதற்குப் பின்
னர்ப், பசிக்கழிந்தோர் நீர்சிறிது பால்சிறிது பருகவன்றேற் பழங்கள்
சற்றே, புசிக்கசல பானகன்று மத்திமம்பால் பழமதமம் பொருவில் கந்
தஞ், சுசிக்கொளப்பந் தோசைபிட்டு மாந்தலத மத்ததமஞ் சொல்லுங்
காலே. (சஎ)

பகர்தருபா ரணமுமுவாப் புணர்ந்திடமுன் பலன்கொள்சைவர்
பண்ண வேண்டு, மிகறருமுப் புரமெரித்த பரமனுயர் சிர்த்திகளை யெடு
த்து முன்னோர், புகல்சரிதை பாராட்டிப் பிற்பொழுது போக்கியெழு
புரவித் தேரோ, னகல்பொழுதிற் கடன்கழித்துத் துயில்வரம்பை யந்தி
யன்ன மருந்த லாகா. (சஅ)

பாரணந்தான் புரிந்ததற்பின் பகற்பொழுதிற் சோம்பொடுகண் ப
டைசெய் தாரோ, லாரணங்கள் பயின்றகுல வந்தணரைம் பதிற்றிரட்டி
யாயி னோரைக், காரணங்க ளொன்றுமின்றிக் கொன்றகமும் பழியடை
வர் கருதுஞ் சாந்திப், போரணங்கி லோமமறை விதிப்படியே புரியிலந்த
ப் பிழைபோ மன்றே. (சகூ)

முத்தியினை விரும்பிமுதற் சங்கற்பந் தவறாது மூவெட் டாண்டு
பத்தியு டனிவ்விரத நோற்றதற்பின் வேதியர்க்குப் பசுப்பூ தானம்
நித்திலவெண் ணகைக்கன்னி தானமன்ன தானமுட னிதிய நல்கிப்
புத்தியுடன் சிவநிசியாம் விரதமொழிவதுவழக்காப் புகல்வர் மன்றே.

வேறு.

இந்நல் விரதந் தனைச்சிவ னங்கிக் கிசைத்திட வுணர்ந்துசெங் கதி
ரோன், கந்தவேள் கதைக்கைக் காலன்விற் காமன் கடவுளர் கண்ணொரா
யிரத்தோன், செந்தமிழ்க் கடவுண் மதிநிதிக் குபேரன் செப்பிய வரன்மு
றை நோற்றார், தந்தம மனத்தில் விழைந்தன பெற்றுத் தலைபெறு நிலை
வரா யினரால். (ருக)

என்றுரைத் திடலு நைமிச வனத்தி லிருந்தவ ரிருகரங் கூப்பி, ந
ன்றுரைத் தனைநீ நானிலத் துள்ளோர் தவையறு சிவநிசி நோற்றிட், டொ
ன்றுதற் கரிதா முத்திபெற் றவர்க ளுளரெனி லுரையென வுயர்ந்த, கு
ன்றுறழ் தவந்தச் சூதமா முனிவன் கூறுவன் கேண்மினென் றிசைப்
பான். (ருஉ)

சிவராத்திரிமான்மியச்சருக்கமுற்றிற்று.

சுகுமாரச்சருக்கம்.

ஆந்த நாண்மலர்க் குவளைகட் புறுகதிர் மதியஞ்
சந்த ருடவிப் பொதும்பரிற் றவழ்ந்துசெல் சாரல்
விந்த மால்வரைக் குத்தரத் துததியின் விரிநீ
ருந்து வெண்டிரைச் சிந்துவென் றொருநதி யுளதால். (க)

விடங்க திர்த்திர ணித்திலக் கோடுகள் விரவி
நெடுந்த ருக்களை முரித்துநன் னீலவண் டார்ப்ப
கொடுந்தொ ழிற்புரிந் தடவிமால் வரைநின்று வரலாற்
கொடுங்கொ லைக்கடம் பொழிகவுட் களிறெனக் குலவும். (உ)

கலைகள் கற்றறி புலவர்வாய்த் தோன்றிய கவிபோன்
மலையி டைப்பிறந் தளக்கரும் பொருள்கொடு வந்து
தலைமை யுற்றசீர் பெற்றுயர் சங்கமார்ந் தெங்கு
முலவி மாநிலத் தவர்களுக் கின்பமே யுதவும். (௩)

ஏந்து பூண்முலை யெயிற்றியர் வயிறலைத் திரங்கக்
காய்ந்த புற்குரம் பைகளழித் தம்புவிற் கவர்ந்தே
யாய்ந்த பாலையிற் குறும்புக ளடக்கிவே லரசர்
வாய்ந்த வெள்வளை முழங்கவந் தாலென வருமால். (௪)

கருது மந்நதிக் கரைமருங் குளதுகட் கமலத்
திரும கட்கணி யன்னது தேவரும் வியப்பத்
தரும நீதியுஞ் செல்வமுந் தழைப்பது தகைசால்
பொருவில் குஞ்சர புரியெனப் புகலொரு நகரம். (௫)

உழவ ருவயற் கமலவாண் முகத்திய ருவப்ப
மழவ ருதநல் லாடவர் மணவினை முடிக்கும்
விழவ ருதவெண் சங்கொலி வீதிதோ றிரட்ட
முழவ ருதவம் முதுநகர்ப் பெருமையார் மொழிவார். (௬)

நீரு கந்தகார் நிகர்நிறம் படைத்திடு நெடுமால்
ஏரு கந்தபைந் துகிலுடுத் தரிக்கலை யிகந்து
பாரு கந்தளந் திடநிமிர்ந் தாலெனப் பதுமம்
போரு கந்திக ழகழ்புறஞ் சூழ்நெடும் புரிசை. (௭)

வீழ்ந்து விண்முகில் வேலையென் றுண்ணநீர் மிகுந்திட்
டாழ்ந்த கன்றுநீ டிஞ்சியை வளைந்தபே ரகழி
தாழ்ந்து மீதுய ரடிமுடிச் சக்கர கிரியைச்
சூழ்ந்து வெண்டிரைப் பெருங்கடல் சுற்றிய தொக்கும். (௮)

குறையில் பொன்னெயிற் குடுமியிற் றொடுத்துயர் கொடிக
ளறைநி றைப்புன லகழிசூ ழக்கவ் வரிவை
நிறைவ னப்பெதிர் நோக்குறு மாடியா நிலவின்
கறைது டைத்திட நீட்டிய கரங்களிற் கவினும். (௯)

நிலவு மாமணி விமானங்க ணிலத்திருந் தென்னப்
பலவு மால்வரைக் குலநிரைத் தெனக்கதிர் பரப்பி
யுலவு மான்மதிக் கூன்முது குரிஞ்சிட வுயர்ந்து
குலவு மாடகத் தியற்றிய கூடமா டங்கள். (௧௦)

மாறு தாரமென நிழலுடன் யலைகா மலைக
ளாற தாமென விடுமதம் பெருக்கெடுத் தலைப்பச்
சேற தாய்நெடுந் தேர்களுஞ் சனங்களுஞ் செல்ல
நீற தாய்த்துக ளெழுந்துவிண் புதைக்குநீள் வீதி. (௧௧)

வையும் யானையும் விலைபெற வளர்முலை வருத்த
மையு நுண்ணிடை நாரியர் புலவியிற் கழித்த
துய்ய மான்மதச் சேற்றொடு துவளுமுத் தாரஞ்
செய்ய மாமணிக் கலன்கிடந் தெறிப்பன தெருக்கள். (௧௨)

ஆதி நூலுண ரந்தணர் சாலைக ளொருபா
னீதி மன்னவர் நிறைமணி மாளிகை யொருபா
லூதியம்பெறு வணிகர்வாழ் வீதிக ளொருபாற்
கேதின் மண்மகள் புதல்வர்தங் குலமனை யொருபால். (௧௩)

மெல்லிக்கு நூலிடையறுமென மேகலை யரற்றிச்
சலிப்ப நண்மலர்த் தாளணி தண்டைநூ புரங்கள்
கலிப்ப நீடிய காந்தளங் கைவளை கலினென்
றொலிப்ப மாதர்க ளாடக மாடரங் கொருபால். (௧௪)

அலைக டற்கண்டந் தரிசுரர்க் கமுதளித் ததுபோற்
றலைமை பெற்றமுத் தமிழ்க்கட லுலமத் ததனு
னலைவு றக்கலக் கிச்சுவை செவிப்புலத் துண்பான்
கலைகள் கற்பவர்க் குரைப்பவர் கழகமங் கொருபால் (௧௫)

வார்வி சித்திடு மணிமுர சோதையுங் கொடிஞ்சித்
தேர்வி டுத்திடு மோதையும் பிளிறுசிந் துரங்கள்
போர்வி டுத்திடு மோதையும் புரவியின் கனைப்புங்
கார்வி டுத்திடு மோதையின் மும்மடி கடக்கும். (௧௬)

மறைவி ரித்துரை பயிற்றுக ரோதையு மன்னர்
திறை யளக்கவர் நீண்டின ரோதையுந் தேவர்க்
கிறைமை யிற்றினஞ் சாறய ரோதையு மெழுந்திட்
டறை கடற்படு முழக்கமுந் தளக்குற வலைக்கும். (௧௭)

துண்ட மாமதி தவழ்மதிற் றொன்னக ரதனுட்
கண்ட வாருயிர்த் தொகைமுத லடங்கிய கணக்கா
லண்ட கோளகை கவித்திடும் பேருல கனைத்து
முண்ட மூண்டகக் கண்ணனி னுதரமொத் துளதால். (௧௮)

அரிபு ரந்தரன் விரும்புமந் நகரளிப் பவன்றே
னரிபு ரந்தரித் துயர்வட வரைகுழைத் தருத்துத்
திரிபு ரஞ்சுடு சிவனடி சிந்தைசெய் பவன்றாட்
பரிபு ரந்திகழ் திருவுறை பரிபுரஞ் சயனே. (௧௯)

காந்து செம்மணிச் சேடனுங் கமடமுங் கடம்பா
யேந்து கோட்டுமோட் டிபங்களோ ரெட்டுமெண் கிரியு
நாந்த கத்தொடு சமரமேற் றெதிருற நணுகும்
வேந்த ருஞ்சுமை யாறிட மேதினி பரிப்போன். (௨௦)

வேத நூன்முறை திறம்பிடா தெங்கணும் விளங்க
மாதர் கற்பெனும் வரம்பழி யாமன்மா நிலத்தோர்
பாத கம்பழி பயின்றிடா தருள்விழி பரப்பி
யாத ரத்துட னறப்பயிர் வளர்த்தர சளித்தான். (௨௧)

அனைய கோமகற் காசிசொல் புரோகித னுளேன்
வினையி னீங்கிய சுரர்குரு நிகர்ப்பவன் வெண்ணூல்
வனையு மார்பினன் முத்தழல் வேள்விகள் வளர்ப்போன்
றனைய ரின்றியே நெடிதுநாட் டவத்தொடு சரித்தான். (௨௨)

சொற்ற வேதிய னில்வயிற் றோர்சுதன் றீமை
முற்று மோருருக் கொண்டென முடங்குவெண் டிரைக
ளெற்று பாற்கட லிடைவிட முதித்தென வெழில்கூர்
பெற்ற மூர்மறைக் கொழுந்தின தருட்பெறப் பிறந்தான். (௨௩)

தோன்று மைந்தனுக் குயர்சுகு மாரனென் றருளா
லீன்ற தந்தைபே ரிட்டழைத் தேர்மணி யழுத்தி
யான்ற பொன்னணி யணிந்தையாண் டணுகிடு மளவின்
மூன்று நூல்வினை நான்மறை விதிப்படி முடித்து. (௨௪)

ஆத பன்வட திசையணை யுத்தரா யணத்துத்
தீத கன்றிடு மோரைகூ டியசுப தினத்திற்
றூத விழ்ந்தவெண் டாமரை யாள்சரண் வழுத்திப்
பாத கம்பயின் மகற்குநான் மறைபயில் வித்தான். (௨௫)

ஆய்ந்த பற்பல கலைகளு மாவினுக் கமுத
மீந்த தாமெனக் கபரிடை யுகுத்தபா லென்ன
வோய்ந்தி டாமலற் பகலெலா முணர்த்திட வுணர்ந்து
வாய்ந்த காயவேள் கலைக்கிலக் கமென வளர்ந்தான். (௨௬)

நவள மேல்களி றெனவரு காட்சிகண் டுருகித்
துவளு நூலிடை நடந்துபின் றொடர்ந்துதா முலைத்
தவள வாண்கை கோட்டிமற் றருந்தனங் காட்டிப்
பவள வாயினார் காமுறு பருவமெய் தினனால் (௨௭)

கஞ்ச நாண்மலர்க் கண்ணினன் கலைமதி தகர்த்து
விஞ்ச வேகிறாத் திணைக்கிவைத் தனையவெண் ணகையான்
சஞ்ச ரீகமட் டார்பசுந் தாரொடுந் தழுவி
மஞ்சு கீண்டெழு மின்னென நுடங்குநூன் மார்பன். (௨௮)

பெய்யு மாமழை முகிலெனப் பிளிறுசிந் துரத்தின்
கைய தாமெனக் கவின்றரு தாழ்தடக் கையான்
றுய்ய வாரிச முகைமுறுக் கவிழ்செழுந் துணரின்
செய்ய தாளினன் றேடரு மாடவர் திலதன். (௨௯)

மின்ன விண்டுவிற் றிரண்டுயர் பணைத்தடந் தோளான்
வன்ன மேகலை மடந்தையர் கண்கவர் வதனன்
கன்ன லஞ்சிலைக் காமனே காட்சிதந் தனையா
னென்ன வன்றிருப் பேரெழி லாரெடுத் தறைவார். (௩0)

தென்ற லந்தடந் தேர்மிசை வருமதன் செங்கை
மன்ற லம்புகள் படப்படப் பதைத்துளம் வருந்திப்
பொன்ற யங்குபூட் புணர்முலைக் கணிகையர் போக
மன்றி லென்றிட நுகர்ந்தவா வடங்கில னாகி. (௩௧)

பழுதி லன்புட னுதயமுற் பகருமுப் பொழுதுங்
கொழுந ரன்றியோர் கடவுளைத் தளிர்க்கரங் குவியா
வழுவில் கற்புடை மடந்தையர் தமைமன மிருட்டித்
தழுவி யானினத் தொருமழ விடையெனச் சரித்தான். (௩௨)

மாமன் மைத்துன னெனவழைப் பானியா வரையுந்
தாம னாகம புராணநூல் சதுர்மறை யென்னு
நாம நுவினி னவின்றிடா னுடொறுஞ் சிலைக்கைக்
காம னாகமம் வேதமீ தாமெனக் கற்பான். (௩௩)

ஈடு வாடைமற் றிலேபன மெனுமருந் தியற்றிப்
பீடு சானிறை முறைமையிற் பெருந்தகை பெற்ற
கோடு மாமணிக் கும்பமேர் குவிமுலை சுமக்கும்
வாடு நூலிடை மகளிரை வசப்பட மயக்கும். (௩௪)

உலக்கு நாளணித் தாயினர்க் கொளிக்குமீ னொக்கு
நலத்தி னோர்சிலைக் காமவே ணணுகிறு நழுவாப்
பெலத்த முல்லையின் றருக்களை வேரொடும் பிடுங்கி
நிலத்தி னீங்கிட விசைத்தெறி சுழல்வளி நிகர்த்தான். (௩௫)

அந்தி வெண்பிறை முடித்தவ னடித்துணைக் கமலஞ்
சிந்தை செய்கிலன் றிருவுருக் களைச்சிலை யென்றே
நிந்தை செய்பவ னீதியாய் நித்தமு மியற்றுஞ்
சந்தி வந்தனை மறந்தனன் றுறந்தனன் றருமம். (௩௬)

இந்த வாறிவ னொழுகிய படிறுகண் டியாருந்
தந்தை பாலெடுத் துணர்த்திடத் தனையனைக் கூவி
யந்த மாநகர்க் கலைஞரை யழைத்தரு கிருத்திச்
சிந்தை தேற்றற வுறுதிநன் மதிபல செப்பும். (௩௭)

பிறர்ம னைக்குரித் தாகிய பேதையைப் புணர்ந்தோ
ரறம டுத்தநண் பொருட்புகழ் பெருமையொன் றடையார்
மறமி குத்தவெம் பவம்பழி மாற்றரு மச்ச
மிறலி யற்றிடும் பகையிவை நான்குமெய் திடுவார். (௩௮)

நீடு றுதுநல் விளமையென் றுளத்திடை நினைந்து
நாடு றூர்பிறர் மனையெனி னுமைநீர் வைப்பில்
வீடு றுப்புகழ் மேவுவர் வித்தகை வித்தங்
கேடு றூர்நர கக்குழி விழுந்தழுந் தகிலார். (௩௯)

ஊறு தீர்மரத் தூரியி னென்றென வொன்றி
வேறு பேதகங் காட்டுபுன் மனத்தினோர் விழைவாற்
கூறு நீணிதி கவர்விலை மகளிர்பாற் குறுகி
யேறு காயமே நுகர்பவர்க் கிகபர மில்லை. (௪௰)

என்று பற்பல நன்மதி துன்மதி யிசைக்
துன்று மச்சுரு மாரனுக் குளைத்தலுஞ் சொற்ற
தொன்று மற்றவன் செவிப்புல நுழைந்தில துபலஞ்
சென்று தைத்திடா வெடிமரமு ளையெனச் சிதைந்த. (௪௧)

கப்பி நாடொறுங் களித்துணை வளிப்பினுங் கோழி
தப்பி லாதுபுன் குப்பைபோய்க் கிளைத்திட றவிரா
தொப்பி னூல்படித் துறுமதி யேபல கோடி
செப்பி னுந்தம் மனம்புரி செயல்விடார் தீயோர். (௪௨)

களிப்பி னுஞ்சுடுங் கட்வுளர் கடல்கடை யமிர்த
மளிப்பி னுஞ்சுடு மறைதிரைக் குளிர்புன லகத்துக்
குளிப்பி னுஞ்சுடுங் குன்றுறு குகைகளிற் குறுகி
யொளிப்பி னுஞ்சுடுங் காமமிக் கூர்தர வுழன்றான். (௪௩)

தூய நீத்திழி தொழில்புரி துற்குணத் திவனைத்
தாயு நீத்தன டக்கையு நீத்தனன் றமர்க
ணைய நீத்தனர் நிலநிதி மகளிர்மே னிகழு
மாய நீத்ததின் மயக்கறத் துறந்தவர் மனம்போல். (௪௪)

தொழுகு லத்தவர் குலத்தினிற் றோமறத் தோன்றிப்
பழுதுபற்பல விளைத்திழி குலத்தொழில் பயின்றான்
முழுமு தற்பொரு ளாய்மறை நடஞ்செய்கான் முகத்தோ
னெழுந்து மத்தக விழிவழி விலக்கினோ ரெவரோ. (௪௫)

துன்னி மாடமுங் கடிமதிற் காவலுங் கடந்து
துன்னு மாரிருட் பொழுதின்மங் கையர்முலை தோய்வா
னன்ன மன்னவர் தமைப்பிறர் விலக்கினு மமையா
ரின்ன தன்மையி னீங்கிவை நிகழ்ந்தது மேல்லை. (௪௬)

முத்த மீதினு முளரிமென் முகிழ்முலை முகத்தும்
வைத்த பற்குறி நகக்குறி கண்டுதம் மனையார்
தத்த மக்குள கற்பழிந் தாரெனச் சலித்துங்
கைத்த சிந்தைய ராகியக் கடிநக ருள்ளார். (௪௭)

காவல் கட்டழித் திரவினிற் காவினு ளெய்தி
யாவ ரித்தொழில் புரியவ ரெனமனத் தெண்ணிப்
பாவ முற்றிய படிற்றொழுக் கச்சுகு மாரன்
மாவ னப்புடை யான்செய லிதுவெனத் துணிந்து. (௪௮)

அற்ற சோக்கியாம் பற்றினு மகப்படா தோசை
பெற்ற மாதர்தம் மொழிப்படி யினிமனம் பிரியா
ரிற்ற தாகுமில் வாழ்க்கையென் றிரங்கியுட் கவலை
யுற்று ளோர்திரண் டென்செய்கே மிதற்கென வுசாவி. (௪௯)

வேறு.

காசினி யென்னு மாதின் கலிக்கரி யாடை நீக்கி
மாசகல் புகழ்வெள் ளாடை சாத்திய மன்னன் முன்போய்க்
கூசுத லின்றி நந்தங் குறைதிறந் தறைவோ மென்னத்
தூசகல் வாரின் மான மிழந்தவர் துணிந்து சூழ்ந்து. (௫௦)

கால்வழி சென்னீ ரென்னக் கருத்தொருப் படுத்தி மான
வேல்வழி கண்ட நெஞ்சர் வெள்வளை கொழுக்கள் கீண்ட
சால்வழி பரந்து மேயுந் தண்பணை நாடு நீதி
நால்வழி புரக்கு மன்னன் வாயிலை நோக்கி யேகி. (௫௧)

வாயிலோர் தம்மைக் கண்டெம் வரவுரைத் திடுதி ரென்னப்
போயிலோர்க் கண்ணை யன்ன புரவலற் போற்றி மாந்த
ராயினோர் கோடி யோரின் கடைந்தன ரென்னக் கஞ்சக்
கோயிலோ ரிருவர் மேவுங் கொற்றவன் கொணர்மி னென்றான். (௫௨)

அரசர்கோ னருளிப் பாடென் றவரையுட் புகுத்தப் போந்து
கரசரோ ருகங்கள் கூப்பிக் கழல்கழற் றொழிற் றாழ்ந்து
பரசினர் கடைக்க ணோக்கம் பரப்பிநுங் குறையா தென்ன
முரசமே தனையை யொப்பாய் கேளென மொழிய லுற்றார். (௫௩)

பூசுரர் குலேச னாகின் புரோகிதன் மைந்த னிந்த
வாசிலீன் கணைக ரந்த மதன்சுகு மார னென்போ
னீசனாய்த் தனது சாதி நீதியா நியம நீத்தாத்
தாசகல் காவு வஞ்சச் சூதுசெய் தார்த்த னாகி. (௫௪)

சூல்வளை முழங்கி யார்க்குந் தொடுகடல் வளாக வைப்போர்
சொல்வளை யாமற் காக்குங் குரிசினின் னகரந் தன்னிற்
கால்வளை வரிவில் லேய்க்குங் கருங்கொடிப் புருவ மின்னார்
மால்வளை மனத்த ராய்க்கற் பிகந்திட வருத்து கின்றான். (௫௫)

இல்லின்மே வியமின் னார்தங் குணங்களை யெவர்க்கு மொன்றுஞ்
சொல்லநா ணுறுவர் யாருந் தோற்றநோய் துடைத்து மாற்ற
வல்லரா மருத்து வர்க்கு மறைப்பவ ருளரோ மன்ன
புல்லரோ மானங் காத்துப் புரந்தரு ளெம்மை யென்றார். (௫௬)

கேட்டபோ திருசைப் போதாற் கிளர்செவித் துளைகண் மூடிக்
கோட்டமி றனிக்கோ லோச்சுங் கோவிரு கோக்கள் சேப்ப
வாட்டமில் குமுதச் செய்ய வாயிதழ் துடிப்ப விந்த
காட்டர சளித்த நீதி நன்றுநன் றென்ன நக்கான். (௫௭)

சீற்றமீக் கூர நின்ற சேனகா வலரை நோக்கி
மாற்றரும் படிற னாகி மறைக்குலந் தோன்றி னோனைக்
காற்றென விரைந்து சென்றிக் கணத்தினிற் கொணர்மி னென்ற
வேற்றுரி முரச நாண விடியென முழங்கிச் சொன்னான். (௫௮)

குன்றிட்டில் விட்டதிற் றென்றுங் கூற்றுவன் றூத ரொப்பா
ரணொழிப் பொழுதி லோடி யந்நகர் முழுதுந் தேடி
வளையில்புன் றொழில்க ளாற்று மறையவன் றன்னைப் பற்றி
வினையுடன் கொணர்ந்து கொற்ற வேந்தர்கோன் றிருமுன் விட்டார்.

வெய்யவேல் விடலை தூர்த்த விப்பிரன் றன்னை நோக்கிச்
செய்யநான் மறையோர் நீதி திறம்பிடு மிவனைச் சென்னி
கொய்திட வேண்டு மென்னக் குலமறை யவனைக் கோற
லையநின் மரபு நீதிக் கடாததென் றமைச்சர் கூற. (௬0)

கோமுகங் குளிர்ந்து கோபக் கொடுங்கன றணிந்து பின்ன
ரோமுகங் கருங்கண் மாதர்க் கிழைத்தகற் பெனுங்கான் காம
மாமுகத் தீயி லாற்சட் டரும்பழி சுமந்த விந்தக்
காமுகன் றனைநம் மெல்லை கடத்திரீர் விடுத்தி ரென்றான். (௬௧)

அனையரவ் வுரைகேட் டந்த வந்தணன் றன்னைப் பற்றி
வனைகழின் மன்னன் காக்கு மாநிலங் கடத்தி யப்பால்
வினைவலி யுனக்குச் சூழ்ந்த தென்றவர் விடுத்து மீண்டார்
சினைவளர் தருக்கள் மேவுங் கானெறி சேணிற் சென்றான். (௬௨)

விண்ணுறு வரைக ளென்ன விளங்குதன் றிணைத்தோள் சேர்ந்த
பண்ணுறு மொழியி னாளை நினைதொறும் பரிந்து நீண்ட
கண்ணுறு புனலா றென்னக் கலுழவே ளணைகள் பாய்ந்த
புண்ணுறு மார்பிற் றென்றல் புகுந்தழல் போல வீச. (௬௩)

அடுசினக் சரடி கோடி யாடுநீ டரவ மாளி
படுமதக் கலுழி தூங்கும் பணைக்கைமால் யானை பாயுங்
கொடுவரிப் புலிவாழ் காட்டிற் கூளிபோற் றனித்துத் துன்பத்
தொடுதிரிந் துழல்வா னங்கோ ரோடையை யடைந்தா னன்றே. (௬௪)

தத்திவீழ் திரைக ளெற்றத் தவழ்ந்துசூற் சங்க மீன்ற
நித்திலங் கரைக டோறு நிலவுகா னிழனீர்ப் பொய்கை
மெத்திய நீள மாழம் விரிவுறு மகல மெல்லா
மத்தியென் றுரைப்ப தல்லா லாரதன் பெருமை சொல்வார். (௬௫)

அம்புய முகமென் காவி யம்பக மாம்பல் வாய்வெண்
கம்புகந் தரங்கோ கங்கொங் கைகணைக் கால்வ ரால்கூ
ரம்புகழ் புறந்தாண் ஞெண்டு வருமுழந் தாள்க ளாகப்
பும்புகீர்ப் படகேர் மென்சொற் பாவைய ருருவஞ் சாட்ட. (௬௬)

றூரிதிரைச் சிலைகால் கோட்டி றூசுவண் டெனுநாண் பூட்டி
விரிமலர்க் கமலங் காவி விசிகங்கள் விரைவிற் கோத்துப்
பிரிவெனுந் துயராற் றுவிப் பிரன்றனைப் பெருத்த பூசல்
புரிதர மதனின் றென்னப் பொலிந்ததப் பொய்கை மன்றோ. (௬௭)

மூண்டவெம் பசியாற் செய்ய முளரியார் முளரி யெங்கு
மாண்டமீ னிரைதேர் வன்மீன் வாய்ப்படா துகண்டு தப்பித்
தூண்டகு வாளை தாவுந் துழனிகண் டெழுந்து துள்ளி
நீண்டபைங் கயலை நேடித் தூரந்து போய்ப் பாயு நீர்நாய். (௬௮)

முத்தியி லவப்பொய் வேட முயன்றுகண் முகிழ்த்தி யோகம்
புத்தியி னிருந்து தீமை புரிபவ ரென்னத் தூங்கித்
துத்தியா டரவி னெட்டைக் கழுத்தினைச் சுருக்கி மீனைக்
குத்திநாய் கிடக்கவ் மூடி யிருப்பன குரண்டங் கோடி. (௬௯)

ஈட்டுவல் வினையின் கொட்பா லெடுத்திடு மியாக்கை மாண்டு
மீட்டும்வந் துலகிற் றோன்றும் விகற்பமித் தன்மை யென்னக்
கோட்டுவெண் டிரைகண் மோதுங் குரைகடற் புவியுள் ளோர்க்குக்
காட்டுவ தென்ன நீரிற் குளித்தெழு காண்டங் கொள்ளே. (௭௦)

தூயவெண் ணிறக்கூன் சங்கந் சூலுளைக் தேறி முட்டர்னா
மேயசெங் கமலப் போதின் மீதிருந் தொளிருந் தோற்ற
மாயர்கண் படைகண் டன்றோ ரகத்துறி சரித்து மாடர்
சேயகைத் தலத்தில் வாரித் திரட்டிய வெண்ணெய் போலும். (௭௧)

கல்லுரிக் கயத்து மீனைக் கறுவ வீழ்ந் ததுபெறுமற்
சில்லுகிர்ச் சிரலை யெட்டிச் சிறைவிரித் திருப்ப தோர்பாற்
சொல்லுமாற் றிகிரிப் புள்ளுந் துணைச்சிறை புலர்த்திக் கோதிப்
புல்லுயிர்ப் பேடை யோடு புளினமே னடப்ப தோர்பால். (௭௨)

மண்டனி லுயர்ந்த பெண்ணைக் கிழங்கினை யகிர்ந்தா லன்ன
துண்டவண் டானஞ் சூழ்ந்த தொழுதிக ளொருபா லிருட்
கொண்டருந் தாக நீங்கக் குதிக்குமா விணங்க ளோர்பா
லொண்டழைச் சிறைப்பா லன்னங் கின்னர மிதுன மோர்பால். (௭௩)

இன்னதன் மையநீர் வாவி யிருங்கரை தன்னி லெய்தித்
தன்னமர் பேடை தன்னைத் தழீஇச் சிறைக் கரத்துள்ளாக்கி,
யன்னமா தாவிற் புல்லு மதுதெரிக் தணங்க ஞர்மேற்
பன்னரு மாசை கூர விருந்தனன் புரிவுற் றிப்பால். (௭௪)

வேறு

பஞ்சணி பதப்பரி புரத்தொலி பரப்ப
நஞ்சனை விழிக்கடை குழைக்கய னடப்பக்
குஞ்சர மருப்பினிரு கொங்கைகள் குலுங்க
வஞ்சியென வோர்புலை மடந்தையவ ணுற்றாள். (எரு)

மன்றல்கமழ் மாலையணி வார்குழ றனக்கு
மின்றமிழ் மொழிக்குமை விழிக்குமெய் யொளிக்கு
மென்றளி ரடிக்குநிகர் வேறுலகி லொப்புண்
டென்றவ டனக்குவமை யாவர்புகல் கிற்பார். (எசு)

ஏர்மருவு நூனிக ரிடைக்கொடி நுடங்கத்
தார்மருவு வார்குழல் சரிந்திட விரிந்தே
யார்பத மிரங்கவரு மன்னநடை மின்னை
மாரனிக ராணசுகு மாரனெதிர் கண்டான் (எஎ)

பொன்னுலகில் வாழுமட மாதுகொல் பொறிப்பைப்
பன்னக நகர்க்கணுறை பாவைகொல் பசுங்கார்
மின்னவிர் சிலம்பினுறை மெல்லியல்கொ லென்றே
யின்னண நினைந்துபி னெழுந்தருகி லெய்தி. (எஅ)

சேயவரி வாள்விழி யிமைத்திடு திறத்தாற்
றோயநில மீதடி மிதித்திடு சுவட்டா
லாயபுவி மீதுவள ரன்னமிவ ளென்னத்
தீயகுண வேதியன் மனத்திடை தெளிந்தான். (எகூ)

மங்குனிற முற்றிடு மடப்பிடியை நாடும்
வெங்கய மெனத்தனி விரைந்துமுன டைந்தே
யிங்கெனெதி ருற்றிடுவ னாவனிவ ளென்றுத்
திங்கணிகர் வாணுத லரித்தன டிகைத்தே. (அ0)

ஏமமணி மால்வரை யெனக்குலவு கொங்கை
வேமசனி காலுமுகின் மீதெழு தடித்தின்
வாமமிகு நேரிடை மடந்தையளை வெல்லுங்
காமனிவ னாமென மனத்திடை கணித்தாள். (அக)

உட்புலமை யற்றுமய லுற்றசுகு மாரன்
முட்குட மெனத்திரள் வளைப்பய மிலக்காய்க்

கொட்புற வெரித்தபுரு வச்சிலை குனித்தே
கட்கணை தொடுக்கவி ரகக்கடல் குளித்தான். (௮௨).

முளைத்தெரி கனற்கணெய் முகந்துகுவ தென்ன
விளைத்தமரில் வென்றிபுனை வேள்கழையி னீள்வில்
வளைத்துமண மேவுமலர் வாளிக டொர்ந்தான்
துளைத்தவ னுரத்தினிடை தூவலள வாழ. (௮௩)

மெய்வச மழிந்துதழன் மீதில்மெழு காகிப்
பொய்வச னமன்றிது புலக்கொளுதி பொன்னே
உய்வதரி தாமுயி ருலர்ந்துபடு முன்னுன்
கைவச மெனுவிழை கவர்ந்தன னிரங்கி. (௮௪)

இக்குவலை வார்விலி னிருத்திமத னேவு
மக்குவளை வாளிவரு மென்றமன மஞ்சேன்
மிக்குவலை மீதுலவி மீனுகின் முகத்தின்
மைக்குவளை தானருள் வழங்குறின் மாதோ. (௮௫)

நீரமுறு வேலைவரு செய்யதுவர் வாயி
னூரமுறு வாணில வருப்பிடி னுறுத்தான்
சோரமுறு மாரழ லெனக்குட நிறைக்க
னீரமுறு வானிலவ தென்செயு மெழுந்தே. (௮௬)

கூடவிளை யாகவொர் குப்பமுலை யென்னு
மாடன்மத மால்களி றணங்கைவச மாறு
னீடனுவ ணக்கியமர் நித்தமுமி யற்றும்
வேடனுயர் வேழமதை வேறன்மிகை யன்றே. (௮௭)

தாயகு முதத்திலெழு தொண்டைதுவ ரொக்கும்
வாயினித முற்றகுடி நீர்து வழங்கிற்
காயமுட னத்திகள் கனற்றியருப் பித்த
மோவிர கப்பெரிய வெப்பவியு மெற்கே. (௮௮)

என்றலை மருட்டுகுழ லுக்கிளைய கூறித்
துன்றலை கடற்படு துரும்பினிலை யற்றோன்
மன்றலை மிகக்கமழ் மலர்க்கர மெடுத்துத்
தன்றலை குவித்திருச ரண்டொழுது நின்றான். (௮௯)

மம்மருற வேள்கணை வருத்தமய லென்னு
மம்மகர வாரிதி யடக்கலரி தாகி

விம்மமன மீதது வெளிப்படைசெய் வாளாய்ப்
பெர்ம்மன்முலை யாள்சிறிது புன்னகை புரிந்தாள். (௯0)

செம்பவள வாயிதழ் திறந்தெயி றிலங்கக்
கும்பமுலை யாண்முறுவல் கொண்டகுறி கண்டே
வெம்புதழ லொத்தவிர கத்தினின் மிகுத்தோ
னம்புய மலர்க்கையவ ளங்கைமலர் பற்றி. (௯௧)

ஏகமன மாகியிரு வோருமெவ ராலும்
போகவரி தாகுமொர் பொதும்பரிடை புக்கு
மேகநிற மானபிடி யுங்கரட மேவு
நாகமு மெனக்கலவி யின்னல நுகர்ந்தே. (௯௨)

வேறு.

இன்னிலவு மன்றுடல மெத்துணைநா ளினியிருக்கு
மன்றளவும் பிரியாம லிருப்போமென் றலராத
மென்றளவ முகைகளையும் வேதியனு மிசைந்து தம்மிற்
புன்றலைசகன் முடைகயமும் புலைப்பாடி தனிற்புகுந்தார். (௯௩)

தளைபயிலான் பசும்பச்சை தழைக்கவ்வி யிசெத்துகளுங்
குளைமுகநாய்ச் சிறுபறழின் குறுங்கழுத்தி னெடுங்கயிற்றாற்
களைபடர்நீள் புற்குரம்பை தூன்றுகரும் புதல்வர்பிணித்
துளையினைசைத் திடெதங்கை கறங்கிடவீர்த் தாட்டயர்வார். (௯௪)

அலைதிரைகன் மணிவரன்றி யார்த்திடுமோர் கலியமிழ்திற்
இணைபுகல்மென் மொழிபயிலா விளங்குழவி பசிக்கிரங்கித்
துணைமுலைப்பால் சுரந்தருத்தித் தோற்பாயு றனிற்றுயிற்றிப்
பிணைவிழிப்புன் புலைமகளிர் தாலாட்டு மிசைபெருகும். (௯௫)

பிறங்கியபுன் மாலைகளிற் பெருங்குடம்பெய் பிழிபருகிக்
கறங்குபறை முகத்தறைந்து களித்தாடிக் களைத்துவிழும்
துறங்குபறைப் புருடர்துயி லொழிந்தெழுவான் புலரிதனின்
மறக்குலவு முட்படைக்கால் வாரணங்க ளோலமிடும். (௯௬)

இத்தகைய புலைச்சேரி தன்னிலிருந் திருண்டமன
மத்தனெனப் புலவுதின்று மதுப்பருகி வசமழிந்து
முத்தநகைப் புலைமகடன் முலைநலத்தே நலநுகர்ந்து
சித்தமிகக் களிகூர்ந்து சிலவைகல் கழித்ததற்பின். (௯௭)

பங்கயக்கட் புலைமகளாற் பன்னமெனப் பகர்வயிற்றுச்
செங்கணிகழ் மழவிடைபோற் செனித்துதித்தார் சிறுவரவ
ரங்கவர்க்கு மதுப்பிசித மருத்தியருத் தியின்வளர்க்கப்
பங்கமிகுங் கடற்புவியிற் பாதகமைந் தெனவளர்ந்தார். (கூஅ)

மன்னுநெடும் பொதியவரை மன்றல்கமழ் தென்றலுடன்
பன்னுதமிழ் பயந்ததெனப் பண்ணவர்பற் பலர்பயிலும்
பொன்னுலகி லரம்பையுருப் பசிகோராம் பொற்பினுடன்
பின்னுமிரு கன்னியரைப் பெற்றுமனப் பிரியமுற்றார். (கூகூ)

மறமறலி யையவரென வளருமைந்து மைந்தருடன்
கறைவடிவாட் படைகரங்கூர்ங் கணைநெடுங்கார் முகந்தாங்கி
யறைதருபே ரடவிகளி லாறலைத்துப் பொருள்கள் வவ்விச்
சிறைபடுநீர்க் கயல்கவர்ந்த சிரலையெனக் கடிதகல்வான். (க00)

அந்தணரொண் ணிலர்குழக்கன் றானிடப மளவிறந்த
கொந்தவிழ்நாண் மலர்க்கோதைக் கோதையர்கள் குதலைமொழி
மைந்தர்நரை முதிர்விருத்தர் வருந்துறவர் வருந்துறக்கொல்
லிந்தவிதக் கொலைகடம்மை யாவர்கணித் தெடுத்துரைப்பார். (க0க)

புக்குபுனற் றடங்கரையிற் புரிதருகண் ணியிற்படுத்துத்
தொக்கநெடுங் கயலினைதேர் தோலடிப்புட் டுவர்முட்டாண்
மிக்குயர்வன் டாரமுடன் விரிந்தசிறைப் பெரும்போதாக்
கொக்குமுதற் பக்கிகளைக் கொன்றுகொன்று தின்றுபின்னும். (க0உ)

மேவிவளர் வனங்கடொறும் வில்வணக்கி விறற்பகழி
தூவிவெரு வொடுகுதித்துத் துள்ளுபுள்ளி மானினங்க
டாவியுக விரலையுரற் றலைக்கேழன் மரைக்குலங்க
ளாவிசெகுத் தூனருந்தி யடுபுலிபோற் றிரியுமந்நாள். (க0௩)

விரிந்தகொடு வினைவசத்தான் மெயிற்பிணிகள் பிடித்தலைத்துப்
பரிந்தகரு விருளோடிப் புலைமகள்பொன் றிடப்புலம்பிப்
பரிந்தனலின் மெழுகாகிப் பற்பலநாட் பயில்பெடையைப்
பிரிந்தவன்றிற் சேவலெனப் பெருந்துயரக் கடல்வீழ்ந்தான். (க0௪)

எழுமயங்கு முளர்தேறு தேங்குமுடற் பொறைசேர்ந்து
விழுமிருகட் புனல்குமிழி விட்டோட விம்மிவிம்மி
யழுமசனிக் குடைந்துபுர ளரவெனநீ ணிலந்தலையா
லுழுமிரங்கும் வெதும்புறுகட் டுயிர்ப்புயிர்த்துப் புழுங்கிமேல், ()

கண்மணியே யெனதாசைக் கங்குல்விடிந் திடவுதித்த
விண்மணியே யிப்பியின்வாய் வீண்டுமிழும் வெண்டரளத்
தண்மணியே பாற்சலதி தருமமுதே தயங்குசுதி
ரொண்மணிநீத் திடுமரவி னுணையிழந்து முய்வேனே. (௧௦௬)

துப்புறழ்செவ் வாயிதழுந் துடியிடையுங் கடிதடமு
மைப்புருவக் கார்முகமு மதிமுகமு மிருவிழியுங்
கொப்புலவு மிருகுழையுங் குருகுலவு கரத்தழகு
மெப்பிறவி பிறந்துநா னினிக்காண்ப தென்றயரும். (௧௦௭)

ஓங்கிணைய பெருந்துயர முழந்துமிக வருந்துமந்நாட்
பூங்கமலக் குறுமுகைபோற் புடைத்தரும்பிக் குமிழ்த்தெழுந்து
கோங்கமுகை யெனக்குலவக் கொங்கைகளங் கவனளித்த
மாங்குயிற்சொல் லியர்விரக மருவுமங்கைப் பருவமுற்றார். (௧௦௮)

மாரிவளர் தருமுகிலே மணிக்கருநீ னிறமணலை
வேரிகமழ் செழுந்துணர்கள் விளங்கிதழிக் கருங்கனியை
நீரிலெழுஞ் சைவலத்தை நிகர்த்துநெய்த்து நெறித்திருண்ட
காரிருளின் பிழம்பென்னக் கவின்கொண்ட கருங்குழல்கள். (௧௦௯)

கஞ்சநெடுங் கயல்கமழுங் காவிபிணை கணைக்கிணையா
யஞ்சனந்தோய்ந் தடலனங்க னுகமக்கற் றலைகடவி
னஞ்சமுதங் கலந்திலங்கு கருமணிப்பொற் குழைகிழித்து
வஞ்சமிகுங் கொலைபயின்று மதர்த்தனவால் வரிவிழிகள். (௧௧௦)

கன்னியர்க ளின்னணமாற் கலைவளர்ந்த மதியமொப்பத்
துன்னியமுட் டாட்கமலத் தூயமுலை முறுக்குடைந்து
மன்னியமென் றோடவிழும் பதநோக்கி மதுகர்வா
னின்னிசைப்பூம் பொறிச்சுரும்ப ரிருந்தென்ன விருந்தவனும். (௧௧௧)

செக்கரொழு மிளமதியுந் தென்றலுமன் றிலும்பகைப்பக்
கைக்கணைகொண் டடர்ந்துமதன் கடும்பூசல் பொரக்கனலின்
மிக்ககொடுங் காமமெனும் விடந்தலைக்கொண் டாற்றிலனாய்
முக்களிரு வரையுமன மருண்டுமெலை யெனமணந்தான். (௧௧௨)

பெருவரைபோ லகன்மார்பிற் பிறங்கியபொற் சுணங்குபொடித்
திருவளைக ளானவளரு மிளமுலைக்கோ டுழுதழக்கப்
பொருவருமா தர்வினுடன் புணர்ந்தால னுகர்ந்திடுநாள்
மருவருபூங் குழலியரு மைந்தரிரு வரைப்பயந்தார். (௧௧௩)

தளைமிசைத்தன் புதல்வியர்க டாமீன்ற தனையரிரு
வரையுமன மகிழ்ந்தெடுத்து மடிமீது வைத்துமுறி
நிரையெறிவா ரிதிபிறந்த தெள்ளமுதக் குதலைகள்கேட்
டுரைதருவெண் ணுரைச்சுரையூ றூட்டிவளர்த் துவப்புற்றான். (௧௧௪)

வேறு.

இவ்வண்ண மிங்கிவன்று னிருந்திடுநாட் பசும்புரவி யிரவி தன்னை, மைவண்ணப் பாந்தள்பகு வாயினிற்பெய் துமிழ்காலை மறையோர்க் கெல்லாஞ், செவ்வண்ணக் கனகமுதற் கலைமுலைப்பாற் றுரைவிடுஞ் செருத்த னல்லான்,கொய்வண்ண மலர்க்கோதைக் கோமகன்றன் றனமிகக் கொடுப்ப வாங்கி. (௧௧௫)

வந்தநல்லன் றனர்கடம்மை வஞ்சரியின் மறித்துருத்து மைந்தரோடுங், குந்தநெடுங் கதைவடிவாள் கொடுமரஞ்சா யகங்களிறைந் தொடிறு தந்தஞ், சிந்தவுடற் செறுக்கைசெய்து கலக்கியவர் கைப்பொருள்கள் சேர வவ்வி, வெந்தழலார் விழித்தறுகண் மிருகாரி யெனத்தனியின் மேவி னானே. (௧௧௬)

பல்லொடிந்து கவுளொடிந்து பழுவொடிந்து முழுவெழுவிற் பணைத்த திண்டோட், கல்லொடிந்து கரமொடிந்து காலொடிந்து மார்பொடிந்து கலங்கி வாயிற், சொல்லொடிந்து பனவரெல்லாம் பகைத்திமிரந் துடைத்திலங்குஞ் சுடர்வேன் மன்னன், செல்லொடிந்து முடிதவழுங் கோயில்வா யிலைநோக்கிச் சென்றா ரன்றே. (௧௧௭)

சென்றுமுறை யோமுறையோ வென்றசொற்றின் டிறல்வேந்தன் செவியிற் கேட்டுக், குன்றுறழ்கோ புரவாயிற் காவலரைக் கூயவரைக் கொணர்மி னென்னப், பொன்றுயிலு மணிமார்ப னரசிருக்கு மண்டபத்திற் புகுத்தப் போனார், கன்றமனத் தடனவர்தங் காயமுறுங் காயமெல்லாங் கண்ணிற் கண்டான். (௧௧௮)

யாவரிது செய்தனரீங் கெனவின்று நீயெமக்கின் றடைந்த தெல்லாம், பாவநெறிச் சண்டாள னொருவன்மைந்த ருடன்மறித்துப் பறித்துக் கொண்டே, யாவவென வலைத்தடித்திட் டாயுதத்தா லவஞ்செய்தெமை யடர்த்தா னென்னக்,காவலன்வா யிதழ்துடிப்பக் கட்டழல்கான் றொருகைமற்றைக் கையிற் றாக்கி. (௧௧௯)

முன்னின்ற முடங்குளைவான் மடக்கணிகர் படைத்தலைவர் முகத்தை நோக்கி, மின்னின்ற விறற்றானைக் காத்தானே. சிலகொடுபோய், விளங்கு செங்கே, ழென்னின்ற கதிர்சுருக்கி யிரவிகுட திசைக்கடல்

வர்செய்த முன்னர்க், கன்னின்ற மனத்தவனைக் கடிதோடிக் கொணர்மினென்னக் கற்பித் தானே. (௧௨௰)

ஆயவரும் விரைந்துகதை யாழிசிலை வாளியொள்வா ளயில்வேலேந்திக், காயவருங் கடுமறலி தூதரிவ ரெனவெருவக் கண்டோர் காணிந், போயவனை முடுக்கர்மராப் பொதும்பர்செறி யடவிதொறும் புழைக்கை வேழஞ்,சீயமுசலெண் குபுலிதிரிசரிகடுருவியெங்குந்தேடலுற்றார்.

கையரிக்கொண் டிடுஞ்சேனைக் கணங்கண்டு மருண்டுமனங் கலங்கிக் காதன், மையரிக்கண் ணியரோடு மக்களொடு மவ்வனத்தின் மறைந்து வைகி, நெய்யரியிற் றீக்கொண்டு நன்ககற்றும் படிற்றொழுக்கனெடிக•ளோதை, செய்யரிற்கா னகன்றிரவிற் பற்பலகா வதங்கடந்து சென்ற பின்னர். (௧௨௨)

காட்டியசெந் நிறச்சூட்டு வாரணங்கூ யழைப்பவொற்றைக் காற்றேர் தூண்டிச், சேட்டிளஞ்செங் கதிர்ப்பரிதி கீழ்த்திசைக்க ணுதயவரை சேருங் காலை, நாட்டியதீ வினைக்கொடியோன் பயமூல மாகடந்து நாருக் கின்ப, மூட்டியவூ ணவதேயப் புடையிலொரு வரைச்சாரலொளித்திட் டானே. (௧௨௩)

தொல்வினையின் படிநெடிய வரைவனங்க டொறுமுழன்று தொடர்ந்து கானிற், பல்வினையம் புரிந்துவழி மறித்திரலை முயலுடும்பு புன்றி மான்கள், கொல்வினையஞ் செய்துகடுங் கொடுங்கூற்ற மிவனெனப்பேர் கொண்டு நாளு, நல்வினைய மொன்றுமின்றித் தீவினைமேம் படச்செலுத்தி வாழு நாளில். (௧௨௪)

அவ்வரையி னெடுஞ்சாரற் கரைக்காதத் தளவுவயின்மால்யன்புத்தேளிர், தெவ்வரைவென் றிடுகுலிசப் படைத்தீயான்மா னுடனொவருந் திரண்டு போற்றக், கைவரையொன் றுரித்தருளுங் கறைமிடற்றுக் கண்ணுதல்கட் கருணை நல்கிச், சைவரையீ டேற்றுகிற்பான் வீற்றிருக்கு நாகநகர் தாறென் றுண்டால். (௧௨௫)

அந்தணர்ப் பூசுரர்பார்த் திவர்வணிகர் சூத்திரர்முன் னுயி னோரும், பந்தணிகைச் சந்தமுலைப் பண்டருசொற் பைந்தொடியார் பலரும் பானற், கொந்தவிழ்நாண் மலர்வாசங் கமழோடை கனிற்குமுமிக் குளிர்நீ ராடிச், சுந்தரஞ்சே ராசார முடித்தபின்னு சாரமிகு சுத்த ராகி. ()

வெய்யகொடும் பாதகங்க ணீறாக்குந் திருநீறு விரவச் சாத்தித், துய்யமணிக் கண்டிகையின் றொடைபுனைந்தஞ் செழுத்தோதித் துலங்

குஞ் சோதிச், செய்யமணிக் குண்டலக்கண் முதலாம்பொற் கலனிலங்
கச் செக்கர் மேனி, யையனுறைந் தருடருசா கேச்சுரத்திற் சென்று
தொழு தன்பு கூர. (கஉஎ)

வெண்டரளத் தொடைநாற்றி விதானித்து நெய்த்தகளி விளக்கு
மேற்றி, வண்டமரும் வலம்புரிமா தவிமுல்லை மல்லிகைசெவ் வந்தி
பிச்சி, தண்டளிர்சேர் மணமிகுத்த மந்தாரங் கரவீரஞ் சாதி வாசப், பு
ண்டரிகங் கருங்குவளைப் போதுகளே யருச்சனைகள் புரிந்து போற்றி. ()

சங்குபட கந்தடிமத் தளந்தாளந் தழங்கியசல் லரிமல் லாரி
மங்குன்முழக் கெனமுழங்சப் பரதவிதிப் படிநடன மகளி ராடச்
சங்குறனிற் கண்டுயிலா தண்டர்பிரா னருட்கோலக் கடலிற் காரி
ஞங்குசிவ நிசிவிரத மாசியிற்பிற் சதுர்த்தசியி னோற்க லுற்றார். (கஉகூ)

ஈதுணரா னல்வினையொன் றிருந்ததனுற் சுகுமார னிருபொற்கோ
ட்டின், மீதுலவு தடநெடுங்க ணும்பர்கள் சன்னிதிமுன்மேவிவா
சத், தாதுலவு நந்தனக்க டடவிமட மனைவியர்கூந் தற்குச் சூட்டப்,
போதுகொய்வான் போதமந்தப் போதுகண்டா னவைகடந்த புதுமை
யெல்லாம். (கங0)

இங்கிதொரற் புதமிதுவெ னிரவிலென்றத் திசைநோக்கு மெல்
லை மாந்த, ரங்கணிறைந் தரகரசங் காவெனமு வைக்குகன்ன லகன்ற
பின்னர்த், தங்கியபொங் கொளித்திபத் தட்டேந்திப் பரிமாறுஞ் சம்ய
ந் தன்னிற், திங்களணி செஞ்சடையோ னினிதுறையுஞ் சிவலிங்கம்
தரிசித்தானே. (கஙக)

மீட்டுமந்த வனத்திலெய்தி வெவ்வினைகள் பலபுரிந்து விருப்ப
நெஞ்சிற், காட்டுமனைக் கிழத்தியரோ டின்பநல நுகர்ந்துசின்னாட் க
ழிந்த பின்னர், வாட்டுபெரும் பிணிப்பலைப்ப மத்துடைக்குந் தயிரின்ம
ன மறுகி மாழ்கி, மீட்டிபெரும் பாதகந்தா னிறந்ததெனத் தனதுடலி
த் திறந்திட் டானே. (கஙஉ)

வேறு.

பெரிய வாயகல் வானி னூற்றசிறு பிறையெ யிற்றர்சிகை பெற்றெழுந்
தெரியு நீள்வடவை யொத்த குஞ்சிய ரிடித்த சொல்லினர் தடித்துநீர்
சொரியு மாரிமுகி லால கரலமிவை தொக்க நீலவரை யொக்குமா
கரிய மேனியர் சிவந்த கண்ணினர்கள் கால தூதர்பலர் மேவினர்.

தாலெ ழொத்தகர மீதெ டுத்தசிலை தண்டு வாளிவளை சக்கரந்
தூல மிக்கவ்டி வாள்சி ரத்தொகை துணிக்கு நீடிய கணிச்சிகூர்
வேல மூற்கழுமுள் பிண்டி பாலமொடு வீசு பாசமிவை கொண்டுநீள்
யால சைத்துமிகு புலிபுல் வாயினை வளைத்தரா மென வளைத்தனர்.

பற்று மென்பர்சிலர் பாவி யாவிபத றிப்ப தைக்கவிரி பாறையி
னெற்று மென்பர்சில ரீர நாவதனை யீரு மென்பர்சிலர் பாரெலா[மூன்
முற்று ணர்ந்துகொலை செய்த கால்கர மொடித்தி ரென்றிவை யுரைத்து
மற்ற டம்புய முரிந்து சிந்திட வரிந்து கட்டினர் வருத்தியே. (௧௩௫)

அடிப்பர்பற்பல விலங்குகொண் றிதசை யன்று மென்றுநனி தின்றபல்
லொடிப்பர் மார்புபழு தூடு தைப்பர்கதை யோச்சி மேலிட வுரப்பிமே
லிடிப்பர் பாசமது கொண்டு கண்டமதி லிட்டி ழுக்கியிரு கையினும்
பிடிப்பர் கண்மணியை பிதுங்கவீர்த்துநெறி பேருவார் முயலு மெல்லையில்·

விளங்கு முந்தியெதிர் நின்றநந்திதனை வருகவென் றெமது வாயில்வாழ்
கணங்களிசென் றொரு கணத்தி னெய்தியடு காலதூதர்கொடு போகமுன
குணங்கெ டாதசுகு மாரனைக்கயிலை கொடுவ ரச்சுடுதி கூறெறுப் [ன்.
பணங்கொள்பாம்புமதி பானிவேணியணி பரமனற்கருணை பண்ணிறு
போற்றியஞ்சுமிடை கொண்டுவாயிலிடை போந்துநந்திகண நாதர்போ
கூற்றி னுருயிர் குடித்த காலனருள் கூர வந்தசுகு மாரனைத் [ய்க
தேற்றி யாதரவு செப்பி யற்புறுநு செம்பொன் மாமணி விமானமீ
தேற்றி யோர்நொடியில் வம்மினீரென வியம்பியங்கவரை யேவினான்.

நீற ணிந்திலகு நெற்றி யார்மிக நெடுத்த புன்சடை முடித்துளா
ராற ணிந்தருளு மெந்தை சேவடி யகத்தி ருத்தியரு ளன்பினு
ருற ணிந்துவரு மக்கு லும்பற வொருக்கி யேரசைகள் பெருக்கன்ற
பேற ணிந்துகிளர் ரிரச தக்கிரி பிரிந்தி டாமனுறை பெட்பினூர். (௧௩௯

தாம மாகமிகு கவ்டி கைத்தொண்டு தரித்து வார்வினை யரித்துளா
ரேம மால்வரை யசைத்தொர் கையினி லெடுக்கு மற்புய மிடுக்கினூர்
காம வேறிகிரி கொந்த முற்கழுமு சைகுக தைப்படைக ளவியநீள்
வாம மேவுவடி வாளி ரேஞுதிறன் மறலி தூதரிடை மருவியே. (௧௪௦)

விமி னிந்தமறை வேதி யன்றனை விடுத்து டாவிடில் விறற்படை
வெடுமி னெம்முட னெதிர்ந்து வெஞ்சம ரியற்றியுங் கள்வலி யாவையுங்
கெடுமி னங்கமுடி புயமெ லும்பெரிய திரியி முந்துயினை யெமதுகைக்
கொடுமி னென்றுசில வாச கங்களெதிர் கூறி னூர்வலிமை கூரவே.(

வேறு

முனிவர் போன்மிக நீறு பூசி முறுக்கி வேணி முடித்துளீர்
தினையி லோரொரு பாதி நீதிகள் செய்தி லீரெமை வெய்யதீ
யனைய வாய்மொழி பேசி யேசி யடர்த்து வன்மை நடத்துவீ
ரினைய ராயிது செய்த தீரிவண் யாவ ரேவலி னெய்தினீர். (கசஉ)

என்று வன்றிற லியம தூத ரியம்ப லுந்தவ னொன்றுபொற்
குன்றுகொண்டுமுன் முப்புரந்தழல் கொள்ளமென்னகைகோட்டிமால்
கன்று கொண்ட காத்த னுயெதிர் காமனைச்சுள விழியழற்
கன்ற ளித்தரு ளாதி நாயக னன்பர் பின்பிது கூறுவார். (கசங)

அண்ட வான்மதி கங்கை மானதி சூடி னேனிசை பாடிமா
வண்ட ருமலர் மூண்ட காசன மறைய வன்பொறை மண்டல்
முண்ட மான்முத லும்பர் மங்குவ ரிம்ப ரென்பதை யுன்னிமு
னெண்ட ராவிட முண்ட ராவணி கண்ட மீதி லிருத்தினேன். (கசச)

கால னாருயிர் கால வேயொரு காலி னாலுதை செய்தநீ
டால மேநிக ரந்த காசுர னவனை முத்தலை யயினெடுஞ்
சூல மேகொடு குத்தி மார்பு துளைத்து வானி லுயர்த்தியோ
லோல மேயன வாவி பாவி யுலர்கு மட்டு முணக்கினேன். (கசரு)

திருக னாசல மதனை யம்மை திடுக்க மெய்த வெடுத்தவ
னுரிய மாமணி முடிபு னைந்தக மொருப துங்கர மிருபது
நெரிய நாரண னென மாய்முத னோடு பாத மிரண்டிலோர்
விரியு நாண்மல ரடியி னுயக விரல நூத்தி மிதித்துளான். (கசசு)

உறுதி வானவர் மான வர்க்கிடை பூதி ருமல் விலக்கவுஞ்
சிறுமை தீர்தர முத்தி பத்திகள் செய்த வர்க்கருள் செய்யவு
மறுவி லாமதி போல வால மிருப்பு நெற்றியி னுங்கணும்
பெறும தாசல வதன னுயொரு பிள்ளை பெட்பொடு பெற்றுளோன். ()

நாலு மாமறை யோது நான்முக னரி நாசி நறுக்கிவந்
தாலு நீடினா யத்தி யுற்றெழு மர்க்கர் பற்க டகர்த்துநற்
சாலு மாமதி விட்டி கற்புரி தக்க னைத்தலை வெட்டிமுற்
கோலும் வேள்வி யழித்தி யென்றொரு கோர வீரனை நல்கினேன். ()

கொடிய தாரக னுயி ரந்தலை கொண்ட சிங்க முகன்கட்ற்
படியின் மிக்குயர் சூர னீதிசெய் பற்ப ருனவர் குலமெலாம்

வடிகொள் வேல்கொடு கொன்று பொன்றிகழ் வானநாடு புரப்பதற்
கடியர் தீவினை யறவ ருட்டரு மறமு கத்தனை யருளினேன். (௧௪௯)

ஏவ யாமிவ ணெய்து கின்றன மிங்கி வன்றனை விட்டுநீர்
போவு தேகட னென்று நின்றன பொறுமை யோடிவை புகலவும்
பாவசாகர மான மானமில் பனவ னைப்பல ரகின்வாய்
மேவ வேவிட லன்றி மீளவி டோமெ னவலி பேசினார். (௧௫௦)

மட்ட றப்புரி புன்றொ ழிற்சுகு மார னாவ னைப்புயக்
கட்ட றுத்தன ருட்க றுத்தனர் கட்க ணற்பொறி கக்கவாய்
விட்ட மைத்திதழ் பற்க டித்து விசித்து சேமி யெடுத்தவே
ரொட்டி லக்கமில் வாளி மாமழை தூவி னார்சிவ தொண்டரே. (௧௫௧)

சரமு றிந்தனர் வார்க ழற்புனை கார ணிந்தனர் கவுளுடன்
சிரமு டைந்தனர் சூல வேல்கதை திகிரி கால்வளை சிலைநெடுஞ்
சரமி ழந்தனர் குடர்ச ரிந்தனர் சவிகு றைந்தனர் தமதுவெண்
ணுரமே ரிந்தனர் தென்பு லத்திடை யோடி னார்யம தூதரே. (௧௫௨)

வேறு

படிபுகழ்விஞ் சையர்நரப்புக் கருவிதட விச்சுருதிப் பண்கள் பாட, விடியொலியின் மிகவதிரு மந்தரதுந் துபிமுழங்க விண்டு பாவு ங், கொடிகுடைகள் பலநிலவக் குலவியநற் கற்பகப்பொற் கோட்டிற் பூத்த, கடிகமழ்பூ மழைபொழியக் கற்றைமணிக் கிரணவெண்கா ற் கவரி வீச. (௧௫௩)

சுகுமார னகைக்கருங்க ணாம்பயர்பல் லாண்டிசைப்ப நவையிற் றீர்த்த, சுகுமாரன் றனைக்கவின்செய் மானமிசை கொண்டணைந்தார் சுரர்கள் போற்றத், தகுமார னுடலடலை படவிழித்த தனிநுதற்கட் டலைவன் வைகு, மிகுமாரத் திரள்சரியத் தள்ளியரு விப்புனல்பாய் வெள்ளி வெற்பில். (௧௫௪)

பொங்குகதிர் விமானத்தி னின்றிழிந்து நந்திவிடப் புகுந்துபோற்பார், மங்குறவழ் வரையரசன் மடப்பாவை யிடப்பாக மருவத்தானை, வெங்கரிக்கூற் றேந்தலையின் வீற்றிருக்கும் விமலனைவெண் டிரைகள் வீசுங், கங்கைநதி முடித்தசடைக் கண்ணுதலைக் கண்குளிரக் கண்ணுற் றானே. (௧௫௫)

கறைசெறியுங் கருந்தாதைச் செந்தாதிற் புரிந்ததன்மை கடுப்பநீதி, பொறையறிவொன் றில்லேனை நல்லறிஞ ருடன்கூட்டிப் புர

ந்தாய் போற்றி, யிறைவபரம் பரனெனவீழ்ந் திறைஞ்சுதலு மெம்மாருப்பெற் றிருத்தி யிங்ங, னறைதருநற் கணங்களுட னெனத் திருவாய் மலர்ந்தமல னருளிச் செய்தான். (௧௫௬)

அக்கணத்திற் சுகுமார னானுருப்பெற் றண்டிருந்தா னமரிற் றோற்றுத், தெக்கணத்திற் சென்றடைந்த தூதர்சமன் றனைத்தொழுது திரைமீ ருண்ட, மைக்கணத்தி னசனியென்ன வங்தெம்மை யடித்தறிவின் மறையோன் றன்னைப், பொக்கணத்திற் பலியிரப்பான் கணங்கள்கயி லையிற்கொண்டு போனா ரென்றார். (௧௫௭)

கேட்டவுட னிருவிழியுங் கனற்பொறிகான் றிடச்சினமீக் கிளரச் செய்ய, வாட்டடக்கை புடைத்துங்கெறம் மஞ்சாரனைப்புகன்று யனைகள் போலும், தோட்டடங்கள் குலுங்ககக்ருச் சித்திரகுத் தனைநோக்கிச் சுகுமா ரன்பா, லீட்டருநற் புண்ணியங்க ளன்றிகொளீ தெரிந்துவினைத் தியம்பென் றானல். (௧௫௮)

மற்றவனுந் தேர்ந்துசுகு மாரனெனுங் கோமகுமறையோன் றிமை, முற்றுமியற் றுத்திரிந்தான் செல்மறுதலன்றுடல முடியுங்காறு, மற்றவம்புன் னியமொழுக்க மிறையளவு மில்லெனப்பின் னமனு மென்னிற், செற்றமுட னெழுந்தாங்கிச் செவ்வியான் றன்னியான் செல்வ னென்றே. (௧௫௯)

கிழனுமிழுந் தனக்கினிய சீலமுமி லிருக்ததனைக் கேட்ப லின்றட, குமுருநாக் கன்னடைகன்டத் தசைத்தடிபோய்த் திசைத்தோறுந் தெரிவிக கவர்த, வழனுமிழ்கட் பெரும்பகட்டின் மிசையேறிக் குறையிறைவற் கறைவான் செம்பொற், கழலணிசித் திரகுத்த னுடன்றூதர் குழ்வரத்தின் கயிலை யெய்தி. (௧௬௦)

அன்னனுவ னப்போக னடலயிரா வதப்பாக னன்னப் பாகன், பன்னைமர்யாழ்க் கந்தருவர் விஞ்சையர்வா னவர்முனிவர் பலரும் போற்ற, வொண்ணனுமா மலர்க்கரத்திற் பிரம்புபற்றிச் சுற்றிநந்தி யுலவா வாதி, வன்னனுறை பேரவைக்கட் புகுந்தொதுங்கி யொல்கிநின்று வழுத்தல்செய்வான். (௧௬௧)

ஆதிகடவு ளிறிவியா யானுடன்பெண் ணவியலவா யனைவுமாகிச், சோதிபெறு மருவுருவாய்த் தோற்றுசரா சரமனைத்துந் தோய்ந்துந் தோயாப், பாதிமதி நுதற்பேதை பாகனுமா யேகனுமாய்ப் பகர்தற் கெட்டாப், பூதிபுனை திருமேனிப் புனிதநின்று மலர்த்தாள்கள் போற்றி போற்றி. (௧௬௨)

இத்தலையா ரமுதமெழ வேண்டுமெனப் பாப்புவடிம் யாப்புற் ரேங்கன், மத்தலையா வமரர்கடைந் திடவடவை கருநிறமாய் வந்த தென்னைக், கத்தலைவா கிறிப்பிக்குங் கடுவொடுக்கு மணியிடற்றாய் கருதா ரூனுன்; முத்தலைவேற் கரநாறு மறைபுகழு மைந்துமுக முதல்வா போற்றி. (கசுங)

உலகுயிர் யாவையும் படைத்தற் கயனுவிப் புரந்திடுதற் குவண மூரு மில்குமணி மார்பினனுய்த் துடைத்திடுதற் குருத்திரனு யிவையு மன்றி, யலகிறிரு விளையாடல் புரிந்தருளு ம் பரம்பரனீ யாதலா லுன், சலசமலர் மருட்டிடியசே வடியடியேன் புன்றலையிற் சாத்தினே னல். ()

என்றினைய துதிகூறி விழுந்தெழுந்து வாய்புதைத்தங் கெறியும் பாசம், வூன்றிறல்சேர் தண்டமுதன் முந்நிளையைத் திருமுன்னே வைத்துத் தாழ்ந்து, பின்றினிமே லடியேற்கிவ் வதிகாரம் போதுமென நிகழ்த்த வீச, னுன்றிமய்யா துன்னுளத்தி லுறுகுறையே தெம்முனீ யுரைத்தி யென்றான். (கசுஏ)

அரியயனே முதலமரர்க் கடுத்ததொழில் செயப்புரிந்தா யவர்க ளங்கங், குரியபடி யினதேவற் படிபுரிந்தார் குறையிலெற் குலகத் துள்ளோர், புரிகொடுந்தீ வினைகளறிந் ததற்கினைய தண்டமெய்யைப் புரிதி யென்று, யெரிகரதி னவரவர்கள் வினைகளறிந் தூட்டுவித்தே னின்று காறும். (கசுசு)

. . . எம்பெருமா னிபணித்த கற்பனைக டவறிலனி டிருந்தி யோங்கி, யும்பருல களவளவுங் குந்சாரற் புரியினிளைத் தொலிக்கு முர்ந்சீ, ரம்பரவம் பரப்புடவித் தேவர்குலத் திலிற்றேன்றி யறத்தை நீத்துக், கம்பமிலா துராத்திரவிற் கலைகலன்பொன் றினுந்திருடுங் கள்வனுகி. ()

விலைமகளி ரல்லார்தங் கற்பழித்து முலைப்போகம் விழைவிற் றுய்த்துப், புலைமகடோ ணலறுகர்ந்தங் கவளுயிர்த்த புதல்வியரைப் புணர்ந்து சாதி, நிலைதவறி யுணருந்தி வேதியரா னினமடவார் நீத்தோர் தம்மைக், கொலைபுரிந்த கொடுமறவன் சுகுமார னென்றொருபேர் கொண்ட தீயோன். (கசுஅ)

உயிருலக்குங் காலமது கண்டெணது தூதரடைந் துருத்து நெருஞ்சி, லயிராவு மிரக்கமின்றிப் பாசமதிற் பிணித்துவரு மந்த வேலை மயிருறுபெண் ணிகண்ணுமோ யுகத்தகர்த்து கின்கணங்கள் வலிமைகாட்டிச், செயிருடனஞ் சேனையெல்லா முரிந்திரிந்து குன்றவென்றி செய்த பின்னர். (கசுகூ)

மைதவிழுங் கிரிச்சிறையீர் வச்சிரத்தோன் முதலமரர் வணங்கி வாழ்த்தச், செய்தவமொன் றில்லானை நவமணிக ளிழைத்திடும்பொற் றேரி லேற்றிக், கைதவம்ற் றருந்தவங்க ளிழைத்துமிக விளைத்தவர்க்குங் கற்பஞ் சென்று, மெய்தரிய சினதுபதத் தெய்துவித்தா ரிதுகுறையென் றியம்பிப் பின்னும். (௧௭௦)

கனமிருண்டு துளித்தமழைத் தாரைகளைக் கணக்கிடினுங் கடலின் றீர, வனவரிவா லுகங்கடனை வான்மீனைக் கணித்தொருவர் மதித்திட் டாலுங், கினமிவன்றான் புரிந்தகொடும் பாதகங்கட் கிலக்கமில்லைச் செப்ப மன்றே, யெனவரத தண்டவனின் பதம்பெறவும் வழக்குளதோ வறைதி யென்றான். (௧௭௧)

அந்தகனைக் கடைக்கணித்தங் கரனுமைப்பா னந்தணரா ளினமா னோர்கட், பைந்தொடியார் பாலர்வதை மீன்மிருகம் பறவைகொன்று பகர்த றின்ற, றந்தைகுரு தாய்பிரம சந்நியாசி சதுர்வேதித்தம்மை நாளு, நிந்தைசெய்த னீதியிழைத் தொழுகல்பொய்ச்சான் றுரைத்துநிதி கவர்த லின்னும். (௧௭௨)

கன்னிகைபொற் கலனிழந்த கைமைகுரு வின்றேவி கணிகைதாசி, யன்னியர்பெ ணன்னையவ ளுடன்பிறந்தார் தன்புதல்வி யன்றி மாமன், பன்னிசகோ தரிதூரத் திரியுடனே பதிவிரதை பழிக்குஞ் சாதி, மின்னிடையார் தமைக்கூடன் மிருகங்க டமைப்புணர்தல் விரதம் விடல். (௧௭௩)

குளங்கூப நந்தவனங் கோயின்மடங் களைச்சிதைத்தல் குதிரையானை, யளந்திடுமெள் ளெண்ணெய்நெய்பொன் னுபயகோ முகிதான மாகவாங்கல், வளர்ந்தபெரு மரங்கடமைத் தறித்தன்முகை விரியாத மலரைக் கொய்தல், விளங்குசிவ ரலயத்தீர்த்தங் களின்மலமூத் திரம்விடுதல் விளம்பி வுற்றில். (௧௭௪)

மனமறிய வுச்சிட்ட மிடல்கண்கந் திருடல்கள்ளுண் மதித்து விற்குஞ், சொனகுலருண் சூதகவீட் டனம்பிதிர்போ சனந்தூர்த்தர் சோறு தின்றல், தினகரனை யராத்திண்டு நாளைகா தசிதசமி திகழுவாவி, லனமருந்த லிடக்கரத்தா லெடுத்தொன்றை யயிறலஞ் சாரஞ் செய்தல். (௧௭௫)

துன்றுநடைப் பரிமுலைப்பால் சுரந்தொழுகு செருத்த னல்லான் கருதி தூயோர், வின்றுமுருத் திரமணிமந் திரந்தேவ விக்கிரகம் விபூதி வேகங், கொன்றுமத கரியடிமை யவுடதங்கன் னிகைதவளங் கு

லவீ பின்ன, லெள்ளுநற்று நெய்தயிர்பா லெண்ணெயொடு கள்ளுவிற்
றலிவைக ளாதி. (௧௭௬)

எண்ணருந்தீ வினைபுரிந்த கொடியோருஞ் சிவநிசிநோற் றியா
ம நான்குந், தண்ணறும்பூ வாரூறங் கடையாம லருச்சித்தோர் சமா
ன மில்லார், நண்ணருமா மகம்புரிந்து நதிபடிந்து தானமிக நல்கி னு
லும், பண்ணருநற் பலவிரத மிழைத்தாலுமிதுபோலப் பயன்றராதே.

அன்னசிவ நிசிவிரதத் தாச்சகனு கேச்சுரத்தி லமுத மூறுங், கன்ன
ன்மொழி யுமையொடெமைக் கண்டிட்டுப்பெற் றனைதனற் காயும்
வெய்யோன், முன்னெரி திருளிமிம்போ லுடைந்தகன்ற திவன்முத
னுண் முயன்ற பாவ, மென்னருநற் கணங்களுடன் கூடுகின்ற வின்
பமுந்தி வீது பெற்றான். (௧௭௮)

என்றிறைவன் கூறுதலுந் தண்டதரன் மீண்டொப்பா னிரக்க மி
ன்றிக், கொன்றினமான் றசையருந்தி மதுக்குடித்து மனைவியர்தங் குழ
ற்குச் சூட்ட, மன்றன்மலர் கொய்திடுவான் வந்ததன்றி யன்புகொடு
வந்தா னல்ல, னுன்றனரு ளிதுவெனின்மற் றுனைப்பதெவ னெனப்ப
ரம னுவனை நோக்கி. (௧௭௯)

எண்டருமெட் டுணையுளத்தன் பிலனோனு முளனோனு மிந்நா ளெம்
மைக், கண்டவர்நோற் றவர்பூசை பண்ணினர்நற் கதியடைவர் கால
நீசு. தொண்டர்தமைக் கொடும்பாசந் தனில்வீக்கித் துட்டவுருத் தோ
ன்றக் காட்டித், தண்டமிழைக் குதறவிருன் றூதருக்கு மிந்தவழி சா
ற்றுகென்றான். (௧௮௦)

செறிந்தவுயிர் கவருதற்குச் சென்றிடேல் மறந்தெனது சினவே
ற்றூதர்; செறிந்தபுரி சடைப்பரம னின்னடியா ரென்பவரை நினைவிற்
றோரா, தறிந்தறியா திழைப்பர்தண்ட மவர்செயன்மற் றடையாள ம
றைதி யென்ன, மறிந்ததினைக் கட்கவிடமுண் டருடிருவாய் மலர்ந்தி
றைவன் வகுத்தச் சொல்வான். (௧௮௧)

சிரங்களங் காதிரண்டுதோள் இரண்டிறற்றோ டாழ்ந்தவிரு செங்கை
வாய்ந்த, வுரந்தனிற்கண் டிகைபுனைவோ ருருத்திரமந் திரநவில்வோ
ருற்று வேண்டும், வரங்கட்கு காடகட் மாமுகனைப் பூமுகங்கொள் வடி
வேற்றனை, கரங்கொள்விறற் சண்முகனைத் தசமுகனோ டரக்கர்தமை
க் காய்ந்த மாலை. (௧௮௨)